.d. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர்

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 11

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, றமலான் ௴

1938௵ நவம்பர்௴

1. அல் குர்ஆன் ... 305
2. அல்ஹதீது ... 308
3. றமலான் மாதம் ... 311
4. எகிப்தி "மஹ்தீ" ... 313
5. மேனாட்டு யாத்திரையின் பயன் ... 316
6. இந்திய சிறுபான்மையினர் கதி ... 319
7. பைத்துல் முகத்தஸில் நடைபெறுவதென்ன? ... 322
8. தா. இ. ஹாபிஜின் கபடசூக்ஷி ... 325
9. வருங்கால யுத்தம் எங்ஙனம் நிகழும்? ... 330
10. ஹஸ்ரத் தமீம்பின் அஸத் (ரலி.) ... 332
11. இஸ்லாமிய உலகச் செய்திகள் ... 335

சென்னை
ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

அன்பர்கள் அதி ஆவலுடன் எதிர்பார்த்த
அருமை நூல்

வெளி வந்து விட்டது ! **வெளி வந்து விட்**

மௌலானா முஹம்மது அலீ "ஜௌஹர்"

இஃது இந்திய முஸ்லிம்களின் ஒப்பற்ற தலைவர் மௌலானா ... மது அலீ "ஜௌஹர்" மர்ஹூம் அவர்களது ஜீவிய சரித்திரம். இ... மேன்மை தங்கிய மௌலானா அவர்களது ஜனன முதல் மரணம் ... யுள்ள வாழ்க்கை சரிதைகளும் சம்பவ நிகழ்ச்சிகளும், அவர்கள் தேச... கும் சமூகத்திற்கும் மார்க்கத்திற்கும் ஆற்றியுள்ள அரும்பெரும் தொ... களும் தக்க ஆதாரங்களுடன் இனிய நடையில் விளக்கிக் கூறப்பட்டி... கின்றன. மேலும் பிரசித்தி பெற்ற கராச்சி வழக்கில் மௌலானா அவ... ஜூரர்களுக்குச் செய்த, பொன்னே போல் போற்றத்தக்க நிகரற்ற பிரச... மும், லண்டன் வட்டமேஜை மகா நாட்டில் அவர்கள் ஆற்றிய கம்பீரம... சொற்பொழிவுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்கிற்கு மிடையே பிணக்கு ... இராஜியப்போர கடுமையாக நடைபெற்றுவரும் இச்சந்தர்ப்பத்தில், ... முஸ்லிம்களின் தேசீய ராஜிய சமூக தேவைகளை தக்கமுறையில் ... கொள்ள விரும்பும் அபிமானிகள் ஒவ்வொருவருக்கும் இந் நூ... மிக அவசியமாகும். இதனை கையிலெடுத்தால் வாசித்து முடிக்... வேறு சோலியிலீடுபட மனம் இடந்தராது. உயர்ந்த கிளேஸ் கா... அழகிய முறையில் அச்சிடப்பட்டிருக்கின்றது.

டபுள் கிரௌன் 1/16 சைசில் 750 பக்கங்களுள்ளது.

அழகிய விதத்தில் கலிக்கோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

கிரயம் ரூ. 3—0—0. தபால் சார்ஜ் பிரத்தி...

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

பற்பல இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

N. B. இந்தியாவிலுள்ளவர்கள் கிரயத்தை முன்பணமாக அ... சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷனைக் குறிப்பிட்டெழுதினால் கம்பி... செலவில் அவர்களுக்கு புஸ்தகம் கிடைத்துவிடும். இந்தியாவிற்கு வெ... லுள்ளவர்கள் புஸ்தக கிரயமும் போஸ்டேஜும் சேர்த்து முன்ப... அனுப்பவேண்டும்.

கிடைக்குமிடம் :— **ஓ. எஸ். சதக்தம்பி மரைக்காயர்,**

36, அரமனைக்காரன் தெரு, சென்னை.

O. S. SATHAK THAMBI MARICA

36, ARMENIYAN ST., MADRAS

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
2218944
சென்னை-600 0..

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - DEC 1938
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 றமலான் மீ 1938ஹு நவம்பர் மீ	இதழ் 11

அல் குர்ஆன்

உங்களுக்கு மேலிருந்து, அல்லது உங்களது கால்களுக்குக் கீழிலிருந்து வேதனையை உங்களுக்கு அனுப்ப அல்லது பல கூட்டங்களாக உங்களைக் குழப்பி, உங்களில் சிலர் சிலருடன் சேர்ந்து யுத்தத்தை அனுபவிக்கச்செய்ய அவன்தான் சக்தியுள்ளவன் என்று (நபியே) நீர் கூறுவீராக.

சோதரீர்! நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருமக்காவில் இஸ்லாமியப் பிரசாரம் செய்து கொண்டிருந்தபோது, அங்குள்ள முஷ்ரிக்குகளைக்குறித்து, "நீங்கள் இணைவைப்பதை விட்டு விலகி, சன்மார்க்கத்தின் பக்கல் வந்து, அவனது றஸூலுக்கும் வேதத்திற்கும், கட்டளைக்கும் கீழ்ப்படியவில்லையாயின், அவனது கோபத்திற்கு நீங்கள் ஆளாக நேரிடும்; அப்பொழுது அவன் உங்களுக்கு வேதனையை அனுப்புவான்" என்பதாக உபதேசங்கள் புரிந்ததுடன், சன்மார்க்கத்தை அழித்துவிட வேண்டுமென முஷ்ரிக்குகள் எதிர்ப்பிரசாரம் செய்வதாலும், மூமின்களை வதைசெய்து இஸ்லாம் மதத்தைத் தழுவியிருப்பதிலிருந்து அவர்களை பலாத்காரமாக மதம் மாற முயற்சி செய்வதாலும் இறைவனது வேதனை அவர்களுக்கு வரும் ...ன்பதாகவும் முன்னறிக்கை செய்தார்கள். ...னெ அக்காபிர்கள் பரிகசித்ததுமல்லாமல், ...நாயகம் (ஸல்.) அவர்களை நோக்கி, "நீர் உண்மையான நபியாக இருப்பின், நபிப் பதவி உமக்குக் கிடைத்திருப்பதாக நீர் கூறுவதில் நீர் உண்மையாளராக இருப்பின், நீர் அடிக்கடி பிரஸ்தாபித்து, எங்களை அச்சுறுத்துகிற வேதனையை நீர் கொண்டுவர வேண்டும்" என்பதாகக் கூறினர். இவர்களது இவ்வினாவிற்கு மறுமொழி கூறும்படியாக இறைவன் இந்த ஆயத்தை அருளினான்.

இந்த ஆயத்திற் கூறப்பட்டுள்ள சமாசாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு காரணத்திற்காக அருளப்பட்டதாக இருந்தாலும், இதிலுள்ள விஷயம் யாவருக்கும் பொதுவானதாகவே இருக்கிறது. தவிரவும், இவ்வாயத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும் அனந்தமுள. அல்லாஹுத்த ஆலாவிற்கு இணை வைத்து வணங்கல், அவனது கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருத்தல், அவனது றஸூலுக்கும் வேதத்திற்கும் மதிப்புக் கொடாதிருத்தல் போன்ற காரியங்களைச் செய்பவர்கள்மீது இறை

வனது கோபம் ஏற்படுகிறது. நாம் இம்மையில் செய்கிற இவ்வித பாவவினைகளுக்கு மறுமையில் அவன் நம்மைத் தண்டிப்பது ஒருபுறமிருக்க, இம்மையிலேயே நாம் பலவித வேதனைகளுக்கு ஆளாக நேரிடும். அவனாலனுப்பப்படுகிற இவ் வேதனை நமது தலைக்கு மேலிருந்தும் வரலாம், நமது கால்களுக்குக் கீழிலிருந்தும் வரலாம், நம் மவரிலேயே கக்ஷிப் பிளவேற்பட்டு ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு அவஸ்தையு மடையலாம்.

அதிகமான மழைகள் பெய்து பயிர்கள் சேதமடைதல், வீடுவாசல் இடிந்து தகர்ந்து போதல், பிரவாகங்கள் ஏற்பட்டு கிராமங்கள் ஆடுமாடுகள் நாசமாகுதல், மனிதர்கள் ஜலத்தில் மூழ்கி இறந்துபோதல், மண்மாரி பெய்தல் போன்ற கஷ்ட நஷ்டங்களெல்லாம் தலைக்குமேலிருந்துவரும் வேதனைகளைச் சேர்ந்தவைகளாகும். ஹஜ்றத் நூஹு (அலை.) அவர்கள் காலத்தில் இருந்த வம்பர்கள் அபார மழை பெய்ததினாலேற்பட்ட வெள்ளப் பிரவாகத்தினால் தான் அழிந்தனர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இக்குவலயத்தில் பிறப்பதற்கு முன்னர், அபிசினியா நாட்டரசனின் பிரதிநிதியாக எமன் தேசத்தை அரசாட்சி புரிந்த அப்ரஹா என்பவன் திருமக்காவிலுள்ள கஃபா ஷரீபை இடித்து விடவேண்டும் என்ற துர் எண்ணத்தால் யானைப்படைகளுடன் வந்த போது, அவர்கள்மீது குருவிகள் எறிந்த கல்லினால் அவர்கள் யாவரும் மடிந்தனர். ஹஜ்றத் லூத் (அலை.) அவர்களது உம்மத்துகள் செய்து வந்த அக்கிரமங்களால் அவர்கள் வசித்துவந்த கிராமங்கள் தலைகீழாகப் புரட்டப்பட்டன. இவைகளெல்லாம் தலைக்கு மேலிலிருந்துவந்த வேதனைகளாகும்.

ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் காலத்திலிருந்தவகிப்து அரசனான 'பிர்ஔன்' ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது சன்மார்க்க போதனைகளை அங்கீகரிக்கவும், பனூ இஸ்ராயில்களுக்கு விடுதலை யளிக்கவும் மறுத்துப் பலவிதமாக அக்கிரமங்களைச் செய்ததன் பயனாக ஜலத்தில் மூழ்கி இறந்தான். அவனுக்குத் துணையாக வந்த அவனது பட்டாளத்தினரும் மடிந்தனர். பணப்பேராசையால் ஜக்காத்துக் கொடுக்க இஷ்டப்படாமல், ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களை அவமானப்படுத்த முயன்ற 'காருன்' என்ற குபேரன் பூமியால் விழுங்கப்பட்டான். ஆது, தமூது போன்ற கூட்டத்தார் இடிமுழக்கங்களாலும், பூமிபதிர்ச்சியாலும் மடிந்தனர் இவைகளெல்லாம் கால்களுக்குக் கீழிலிருந்து வரும்படியான வேதனைகளைச் சேர்ந்தவை.

தவிர, அரசர்கள், தலைவர்கள் போன்றவர்கள் மூலமாகப் பொதுஜனங்களுக்கு ஏற்படுகிற அவஸ்தைகளும் கஷ்டங்களும் தலைக்கு மேலிலிருந்து வருகிற வேதனைகளென்றும், நமக்குக் கீழுள்ள நமது வேலைக்காரர்களாலும் பிறராலும் சம்பவிக்கும் கஷ்டசங்கடங்கள் நமது கால்களுக்குக் கீழிலிருந்துவரும் வேதனைகள் என்றும் சில வேத வியாக்யானிகள் கூறிஇருக்கிறார்கள்.

இவ்வித துன்பங்கள் மக்கள் யாவருக்கும் பொதுவாகவும் வருவதுண்டு, தனித்தனி நபர்களுக்குப் பிரத்தியேகமாகவும் வருவதுண்டு. இவ்வித வேதனைகளை நாம் இக்காலத்திலும் காணாமலில்லை. சென்ற பத்து வருஷங்களுக்குள்ளாக நமது இந்திய நாட்டில் பல முறை பூகம்ப அதிர்ச்சிகளும், பிரவாகங்களும் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஏககாலத்தில் மடிந்த விபரங்களையும், பிரவாகத்தின் காரணமாக நூற்றுக் கணக்கான மைல்கள் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் ஜலத்தால் மூழ்கி கிராமங்களும், கால்நடைகளும், பயிர்களும் சேதமடைந்ததுடன் நூற்றுக் கணக்கானவர்கள் ஜலத்தில் மூழ்கிய செய்திகளையும் நாம் பத்திரிகைகள் மூலமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். நமது இந்திய நாட்டில் மட்டுமில்லாமல் பர்மா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, துருக்கி முதலிய நாடுகளிலும்கூட இத்தகைய விபத்துக்கள் நேர்ந்ததையும் உலகிலுள்ள பல அரசாங்கங்கள் கஷ்ட நிவாரணத்திற்காக பண உதவி புரிந்ததையும் நாம் படித்திருக்கிறோம். இவைகளை எல்லாம் நாம் பார்த்தும் படிப்பினை கொள்ளாமல் இருப்பதுதான் வருந்தத்தக்க விஷயமாகும்.

முஸ்லிம் அல்லாதார் ஆண்டவன்மீது நம்பிக்கை கொள்ளவேண்டிய முறைப்படி நம்பிக்கைகொள்ளாமலிருப்பதால், இவ்விபத்துகளுக்குக் காரணம் யாது? என்று ஆராய்ச்சி செய்யவும், இனிமேல் அவைகள் நடைபெறாதவாறு தடுப்பதற்கான முறைகள் யாவை என்பதைக் கண்டுபிடிக்கவும் முயன்று கொண்டிருக்கின்றனர். ஆனால், இறைவனின் சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுதாகக் கூறிக்கொள்ளும் நாம், சத்தியத் ஹஜ்றத் முஹம்மது ரஸூலுல்லாஹி

அவர்களது கட்டளைக்கும் அவர்களால் கொண்டு வரப்பட்ட திருகுர்ஆனுக்கும் கீழ்படிவதாகச் சொல்லிக்கொள்ளும் நாம் இவ்வித விபத்துகளுக்குக் காரணம் யாது என்பதைக் குறித்து திருகுர்ஆனிலும் ஹதீதுஷரீபிலும் கூறப்பட்ட எச்சரிக்கைகளைக் கவனியாமலும், நம்மை நாம் திருத்திக்கொள்ளாமலும் இருப்பது முறையாமோ என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தவிர, மற்றொரு விஷயமும் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது பல கூட்டங்களாக உங்களைக் குழப்பி, உங்களிற் சிலரைச் சிலருடன் யுத்தத்தை அனுபவிக்கச் செய்வான் என்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி நமக்குள் கட்சிப்பிளவுகள் தோன்றி, நாம் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொள்வோம் என்பதுதான் இதன் கருத்து. இக்காலத்தில் நமக்குள் எத்தனை கட்சிகள் இருக்கின்றன. இக்கட்சிகள் ஒன்றையொன்று மிகைத்து, அடக்குவதற்காக மூன்றாவதான அந்நியரிடம் சரண்புகுந்து நம்மை நசுக்க முயல்வதை நாம் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம். இதற்கு உதாரணங்கூற நாம் வெகுதூரம் செல்லவேண்டாம். நமது சென்னையிலுள்ள சட்டசபை முஸ்லிம் அங்கத்தினர்களை எடுத்துக்கொள்வோம். ஜஸ்டிஸ் கட்சியிலும், லீக் கட்சியிலும், காங்கிரஸ் கட்சியிலும், சுயேட்சை கட்சியிலுமாக அவர்கள் பிரிந்து, தங்கள் கட்சிக்குச் செல்வாக்கு உண்டாக்க பகீரதப்பிரயத்தனம்செய்து கொண்டிருக்கின்றனர். மிகவும் சிறிய தொகையினரான 28 பேர்களுக்குள் 4 கட்சிகளிருந்தால், இவர்களை வேறு எக்கட்சியினராவது மதிக்க முடியுமா? இவர்களது அபிப்பிராயத்திற்கு எவரேனும் செவி சாய்ப்பார்களா? ஹிந்திப் பாஷையை ஸ்கூல்களில் கட்டாயப் பாடமாக ஏற்படுத்துவதைக் குறித்து சட்டசபையிலுள்ள நமது முஸ்லிம் அங்கத்தினர்கள் ஒரு முகமான அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. ஒரு கட்சியினர் ஹிந்தி வேண்டாம் என்றால், வேறு கட்சியினர் ஹிந்தி வேண்டும் என்கின்றனர். ஹிந்தி பாஷையால் இஸ்லாத்திற்குக் கேடு என்று ஒருவர் கூறினால், ஹிந்தியைக் கற்றுக் கொள்வதால் இஸ்லாத்திற்கு நன்மை என்று மற்றொருவர் கூறுகின்றார். இதனால் தேச மக்கள் நியாயம் எது? நியாய விரோதம் எது? என்பதை அறிந்து கொள்ள முடியாது தவிக்கின்றனர். முஸ்லிம்கள் இவ்வாறு பிரிந்து நிற்பதன் பயனாக, முஸ்லிம் ஸ்கூல்களில் வேத பாடம் கற்பிக்கவேண்டும் என இதற்கு முன்னுள்ள சர்க்கார் ஒப்புக்கொண்ட திட்டம் அமூல் நடத்தப்படுவது நின்றதும், இப்பொழுது உருது முன்ஷிகளை ஏற்படுத்தி, உருது பாஷையைக் கற்பித்து வந்ததற்குத் தடையேற்பட்டதும்தான் கண்ட பயன். எனவே, சட்டசபையிலுள்ள நமது பிரதிநிதிகள் கட்சிப் பிளவில்லாமல், ஒரே கட்சியினராக இருந்திருப்பார்களாயின், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் சர்க்கார் மூலம் சாதித்துக்கொள்ளலாம்.

நமது மாகாண சட்டசபையில் மட்டிலும் இவ்வித நிலைமை இருக்கிறதென்பதில்லை. உள்நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்றால், கட்சிப் பிளவு இல்லாத முஸ்லிம் கிராமத்தைக்காண்பது அரிதாக இருக்கிறது. சிற்சில சமயங்களில் இக்கட்சிப் பிளவின் பயனாக மஸ்ஜிதுகளில் தொழுவிக்கும் வேலைகளுக்கும், மஸ்ஜிதுகளைத் திறந்துவைக்கும் காரியத்திற்கும் கூட சர்க்காரிடம் மன்றாடி 144-வது பிரிவுப்படி தடையுத்தரவை வாங்கி விடுகின்றனர்.

கூடு, கொடியேற்றம் முதலிய பிதுஅத்தான அனாச்சார காரியங்களைச் செய்ய வேண்டாம் என்று எவரேனும் கூறினால், கட்சிப் பிரதிகட்சிக்காக இக்காரியத்தை மற்றொரு பிரிவார் வேண்டுமென்றே மேளதாளத்துடன் நிறைவேற்றி வைக்கின்றனர். இவ்விதமாகச் செய்வதால் அவர்களுக்கு இவ்வுலகில் ஏதேனும் பிரயோஜனமிருக்கிறதா என்று கவனிக்கின், அதுவும் இல்லை. வீம்புக்காக கைப்பொருளைச் செலவு செய்வதுதான் மிச்சம். எனவே, நமது சகோதரர்கள் சென்றுவிட்டகாரியங்களை தூரத்தள்ளி விட்டு கட்சிப் பிளவுகளை ஒழிக்க முற்படுவார்களாக. இவ்வித கட்சிப் பிளவுகளால் நமது சமூகத்தின் பொது நன்மை வெகுதூரத்திற்குப் பாதகமடைகிறது என்பதை உணர்வார்களாக.

ஆனால், ஒரு காரியத்தை அவர்கள் நன்குணர்ந்து கொள்ளல் வேண்டும். அல்லாஹுதஆலாவை மறந்து, அவனது சத்திய சன்மார்க்கத்தை அசட்டை செய்வதால்தான் இவ்வித காரியங்களேற்படுகின்றனவென்பதை இவ்வாயத்து நமக்கு இனியில்லா வண்ணம் எடுத்தியம்பி இருப்பதால், ஏனைய மதத்தினர் புறக்காரணத்தைத் தேடி, மேலெழுந்த வாரியாகப் பரிகாரம் செய்வதுபோல், நமது கட்சிப்பிளவுகளை

நீக்கிக்கொள்ள ஒப்பந்தம்செய்யவோ, வேறொன்றைச் செய்யவோ, முயன்று சித்தியடையாமல் கவலை கொள்வதைப் பார்க்கினும், ஒவ்வொருவரும் தௌபாச் செய்து, இனிமேல் இறைவன் கட்டளைக்கு மாறாக நடப்பதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொண்டு, சன்மார்க்கத்தின் கடமைகளை நிறைவேற்ற முன்வருவார்களாக. அல்லாஹுதஆலாவிற்கு மிகவும் பிரியமான இந்த ரமலான் மாதத்தில் நோன்பு வைத்து, இவ்விதமாகப் பிரதிக்ஞை செய்து கொண்டால், அவனது கருணையும் அருளும் மிக அதிகமாக ஏற்படுவதற்கும் மிக ஹேதுவாக இருக்கிறது. தவிரவும், நோன்பாளிகள் கேட்கும் துஆவை அங்கீகரிப்பதாகவும், நோன்புக்குரிய பயனை அல்லாஹ் தானே நேரடியாகக் கொடுப்பதாகவும் ஹதீதுகளிலிருந்தும், பெரியார்களது உபதேசங்களிலிருந்தும் தெரிய வருவதால், நம்மீதேற்பட்டுள்ள துர்அதிர்ஷ்டமான இந்நிலைமையை நீக்கிக்கொள்வதற்கு இது மிகவும் ஏற்ற சமயமாகும். நாம் தொழுகையையும் நோன்பையும் கடைப்பிடித்து விட்டால், அப்புறம் நமக்குள்ளிருக்கிற இப்பிளவுகளும், வழக்குகளும் தானாகவே ஒழிந்துபோம். இறைவனது கிருபை றஹ்மத்து நமக்கேற்பட்டால்தான் நாம் கரை சேர முடியும். அதனை நாம் கவனியாமல், மேலெழுந்தவாரியாக புறக் காரணங்களை மட்டிலும் கவனிப்பதில் பிரயோஜனமொன்றுமில்லை. நமக்குள் ஏற்பட்ட இந்நிலைமைக்கு ஆணி வேராக இருக்கிற பாவவினைகளை நாம் அகற்றிவிட்டோமாயின், நமது கஷ்டங்கள் தானாகவே நீங்கிவிடும். இதனாற்றான் ஸஹாபிகள் தங்களுக்கு துக்கமோ, கவலையோ ஏற்பட்டபோது உடனே தௌபா, இஸ்திஃபார்களைச் செய்வதிலும், நபில் தொழுகைகளை நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு வந்த பெரும் பெருங்கஷ்டங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கின. ஆகவே, முஸ்லிம்களாகிய நாமும் நமக்கு ஏற்பட்டுள்ள இக்கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ள நமக்கு வழி காட்டிகளாக இருக்கிற நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும், அவர்களது ஸஹாபிகளையும் பின்பற்றுவோமாக.

அல் ஹதீது

மூன்று காரியங்களைக்குறித்து எனது றப்பினிடம் பிரார்த்தித்தேன். அவைகளில் இரண்டை எனக்களித்தான்; ஒன்றை மறுத்து விட்டான். அதாவது எனது உம்மத்து மார்களைப் பஞ்சத்தால் அழிக்கவேண்டாம் என்று பிரார்த்தித்தேன், அதனை அவன் அங்கீகரித்துக்கொண்டான். இன்னும் எனது உம்மத்து மார்களை வெள்ளத்தால் அழிக்கவேண்டாம் என்று பிரார்த்தித்தேன், அதனையும் அங்கீகரித்துக்கொண்டான். அப்புறம், எனது உம்மத்துமார்கள் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொள்ள விட வேண்டாம் என்று கேட்டேன். அதனை அவன் அங்கீகரிக்கவில்லை, என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கேட்ட இந்தப்பிரார்த்தனைகளின்படி முஸ்லிம்களாகிய நாம், ஹஜ்றத் நூஹ் (அலை.) அவர்கள் காலத்திலேற்பட்ட பெரு வெள்ளத்தைப் போல் நாடெங்கும் பஞ்சம் தோன்றி, அப்பஞ்சப் பிணியால் அழியப் போவதுமில்லை; வெள்ளப் பிரவாகத்தில் யாவரும் அழிந்துவிடவுமாட்டார்கள். என்றாலும், ஹஜ்றத் நூஹ் (அலை.) அவர்கள் காலத்திலேற்பட்ட பெரு வெள்ளத்தால் எல்லாருக்கும் ஆபத்து வந்ததையும், இவ்வாபத்திற்குக் காரணம் அவனது நபியாகிய ஹஜ்றத் நூஹ் (அலை.) அவர்களுக்கும், அவனது கட்டளைகளுக்கும் ஜனங்கள் கீழ்ப்படியாமலிருந்ததையும் ஞாபகமூட்டி, ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யும் பொருட்டு ஒவ்வொரு முப்பது வருஷத்திற்கு ஒருமுறை அதிகமழை பெய்து, வெள்ளங்களேற்படும் என்பதாகவும் இவ்வாறு ஏற்படும் வெள்ளத்தால் அதிகஷ்டமேற்படாது என்பதாகவும் பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். எவ்வாறாயினும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது துஆ பரக்கத்தால் முஸ்லிம்களாய நமக்கு மேற்கூறப்பட்ட இரு காரியங்களால் பொது அழிவு வரமாட்டாது என்பது திண்ணம்.

ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கேட்டும், இறைவனு லங்கீகரிக்கப்படாமலிருக் கிற மூன்றாவது பிரார்த்தனையைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியதவசியம். நம்மவர் ஒருவ ருக்கொருவர் பிணங்கிக்கொள்வர் என்ப தும், பலமாகச் சண்டை போட்டுக்கொள்வர் என்பதும், அம்மூன்றாவது பிரார்த்தனை அங்கீ கரிக்கப்படாமற் போனதிலிருந்து தெரியவரு கிறது. ஆகவே, நாம் நமக்குள் எவ்விதமான வேற்றுமையும் பிளவு மேற்படவே கூடாது என்றும், முஸ்லிம்களுக்குள் எந்த இடத்திலும் எவ்விதச்சண்டையும் வரவே கூடாது என்றும், எதிர்பார்ப்பது வீணாகும். இதனால் நாம் சண் டைதான் போடவேண்டும் என்பது அவசிய மல்ல. சண்டை போடுவதற்கான சந்தர்ப் பத்தை நாம் உண்டு பண்ணாமலிருப்பது தான் அவசியமாகும்.

தவிரவும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், இவ்வுலகம் முழுவதற்கும் பொது நபியாக வந்த வர்கள். அவர்களது உம்மத்துகளை குறிப் பிட்ட ஒரு தேசத்திற் குள்ளாகவோ, நாட்டிற் குள்ளாகவோ அடக்கி விடவும் முடியாது. இஸ்லாம் மதத்தின் கொள்கைப்படி ஒருகாலத் தில் இக்குவலயத்திலுள்ள அனைவரும் முஸ் லிம்களாக இருக்கவேண்டும். அப்புறம், ஒரு காலத்தில் யாவரும் உண்மை முஸ்லிமாக இல் லாமலிருக்கவேண்டும். அல்லாஹுத்த ஆலா வின் பெயரைச் சொல்வதற்குக்கூட எவரும் இல்லாத ஒரு சந்தர்ப்பம் வரவேண்டியதாக இருக்கிறது. இவ்வுலகில் எவரேனும் ஒருவர் அல்லாஹுத்த ஆலாவின் மெய்யடியாராக இருப்பாராயின், அவருக்காக இறைவன் இவ் வுலகை அழிக்க மாட்டான். ஆகவே, இவ்வுல கம் அழிவுறும் காலத்தில் ஒருவரும் உண்மை முஸ்லிமாக இருக்கமாட்டார் எனத் தெரிகி றது. இவ்விதநிலைமை ஏற்படுவதற்கு ஜனங் களுக்கிடையில் குழப்பமும் கலகமும் இருந்து வருவதும் ஒருகாரணமாகும். ஆதலால், ஒவ் வொருகாலத்திலும் உள்ளமுஸ்லிம்கள் இயன்ற வரை தங்களுக்குள் கட்சிப் பிளவும் கலகமும் ஏற்படாமலிருக்க முயலவேண்டும். ஏனெ னில், "எனது உம்மத்துகளுக்குள் வாள் வீசப்பட்டால், கியாமத்து நாள்வரை அது அகலமாட்டாது" என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருப்பதால், அவ்வித நிலைமை ஏற்படாமலிருக்க நாம் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

என்றாலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறிய இந்த ஹதீதுக்கேற்ப, ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது, முஸ்லிம்களுக் கிடையில், அபிப்பிராய வித் தியாச முண்டாகி, ஒருவருக் கொருவர் வாளேந்தி யுத்தம் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதன் பலனாக ஹஜ்றத் உது மான் (றலி). அவர்கள் ஷஹீதாகவும் செய் தார்கள். அன்று முதல் இன்று வரை முஸ்லிம் களுக்குள் லௌகிக விஷய சம்பந்தமாக ஒற்றுமையில்லாமல் பிரிந்தே நிற்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் பலத்த போராட்டங்களையும் செய்து கொண்டனர். ஹஜ்றத் அலீ (றலி.) அவர்களுக்கு விரோதமாக ஹஜ்றத் முஆவியா (றலி.) போன்ற ஸஹாபிகளும்கூட வாளேந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்புறம் பனூ உமய்யா வம்சத்தினருக்கும், அப்பாஸிய்யா வம்சத்தினருக்கும் சண்டை. இதற்கிடையில் அப்பாஸிய்யா வம்சத்தினருக்கும் பனூ பாத்திமா என்ற வர்க்கத்தாருக்கும் சண்டை. இவ்வித போராட்டங்களால், முஸ்லிம்கள் பிளவு பட்டுப் பலஹீன மடைந்தனர்.

இனி, நமது இந்திய நாட்டின் நிலைமையைக் கவனியுங்கள். நமக்குள் ஒற்றுமை இல்லாத தால், நம்மிடமிருந்த அரசாங்கத்தை இழந்து பிறருக்கு அடிமையாயினம். இந் நிலைமையை நாம் இன்னமும் சரிவர உணர்ந்து கொள்ளாம லிருப்பதன் பயனாக, காங்கிரஸ் வாதிகள் நம் மிடம் பலப்பல ஆசைவார்த்தைகளைக் கூறி நயமும் பயமுமாகப் பேசி நம்மில் அநேகரைக் காங்கிரஸில் சேர்த்து வைத்துக்கொண் டிருக் கின்றனர். முஸ்லிம்களும் இந்துக்களும் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்றும், முஸ்லிம்களின் ராஜீய ஸ்தாபனமாகிய முஸ்லிம் லீக்குடன் ஹிந்துக்களின் ராஜீயஸ்தாபன மாகிய காங்கிரஸ் உடன்படிக்கை செய்து கொள்ளட்டும் என்றும் கூறினால், இதற்கு ஹிந்துக்கள் விரல் விட்டெண்ணக் கூடிய சில காங்கிரஸ் முஸ்லிம்களைத் தடைக்கல்லாக ஏற் படுத்தி வைத் திருக்கின்றனர்.

காங்கிரஸில் ஜாதிமதபேதமின்றி யாவரும் சேரலாம்; இந்தியாவிற்கு காங்கிரஸ் ஒன்று தான் பொதுச்சபை; லீக் வகுப்புவாதத்தைக் கொண்டிருக்கிறது; லீகின் வகுப்பு வாதத்தை அங்கீகரிக்காத தேசியவாதிகள் ஏராளமாக இருக்கின்றனர்; ஆதலால், முஸ்லிம்லீக் முஸ் லிம்களுக்குப் பிரதிநிதியாக இருக்கத்தகுதி

இல்லை என்று கூறுகின்றனர். எவ்வாறுயினும் நம்மிலுள்ள ஒரு சிலர் காங்கிரஸில் ஒட்டிக் கொண்டு, ஹிந்துக்களின் நோக்கம்போல் நடந்துகொள்ளச் சித்தமாக இருப்பதனுலேயே, சென்ற 1915-ல் முஸ்லிம்களின் பிரதிநிதியாக மதித்து ஒப்பந்தஞ் செய்த காங்கிரஸ் இன்று இவ்வாறு கூறவேண்டியதாகிவிட்டது. ஆகவே, முஸ்லிம்கள் காங்கிரஸுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முயலுவதைப் பார்க்கினும் "பகைவர்கள் ஆதிக்கம் கொள்வதற்குக் காரணம் அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் செய்து கொடுத்த அறுதிமானங்களை மீறுவதுதான்" என்பதாக ஹதீது ஷரீபுகளில் வந்திருப்பதைக் கடைப்பிடித்து, நாம் தௌபாச் செய்து இஸ்லாமிய சன்மார்க்கத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பதாக திடசங்கல்பம் செய்து கொள்வோமாயின், இப்பொழுது நம்மீது பிறர் செய்துவரும் ஆதிக்கம் தானுக எடுபட்டு விடும்; நம்மவர் ஒற்றுமையாகி விடுவர். அத்தி பூத்தாப்போல் ஆங்காங்கு ஒருவர் இருவர் பிணங்கினுலும், அப் பிணக்கு நமது சமூகத்தைப் பாதிக்காமல் இறைவன் காப்பாற்றிக் கொள்வான். இன்று நம்முடன் உடன்படிக்கை செய்து கொள்ள இஷ்டப்படாதவர்கள் தாங்களாக முன்வந்து ஒப்பந்தஞ் செய்து கொள்வர்.

ஆகவே, நமக்கேற்பட்டுள்ள குறைகளுக்குத் தக்க மருந்தைத்தேடி நாம் அலையவேண்டியதுமில்லை, பிற சமூகத்தாருடன் ஒப்பந்தஞ்செய்து கொள்வதற்காக நமது சமூகநலனை விட்டுக் கொடுக்கவும் வேண்டியதில்லை. இவர்களது மனதை மாற்றச் சக்தியுள்ளவனை அல்லாஹுதஆலாவிற்கும், அவனது றஸூல் (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களாகிய நாம் செய்து கொண்டுத்திருக்கிற உடன்படிக்கையை நிறைவேற்றுவோமாக. இந்த றமலான் மாதத்தில் நோன்புவைத்து அவ் வுடன்படிக்கையை நிறைவேற்றுவோமாக. ஆமீன்.

"றமலான் மாதம் வந்தவுடன் சுவர்க்கத்தின் வாயல்கள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் வாயல்கள் அடைக்கப்படுகின்றன" என நபிகள் பெருமானுர் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அனஸ் பின்மாலிக் (றலி.) அறிவிக்கின்றுர்கள். ஹஸ்ரத் ஷேக்அப்துஹு அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், தூய்மை பொருந்திய இம்மாதத்தில் அல்லாஹ்தஆலாவின் சன்னிதானத்தினின்றும் நன்மையான காரியங்களுக்காக அதிகமான கூலி கொடுக்கப்படுகிறதென்பதும், எவர் உண்மையான அச்சப்பாடுடன் அல்லாஹ்த ஆலாவுக்கு வழிபடுகின்றுரோ அல்லது வழிப்படுவதாக உறுதிகொண்டு அறுதிமானஞ் செய்து கொள்கின்றுரோ அவர் சுவனபதியடைய அருகதையுடையவராகி விடுகிறுர் என்பதும் சுவர்க்கம் திறக்கப்படுவதென்பதன் கருத்தென்றும், இம்மாதத்தில் பாவ மன்னிப்புத் தேடுபவருக்கு கிருபை தயாள மன்னிப்பு அளிக்கப்படுகிறதென்பது நரகத்தின் வாயல் அடைக்கப்படுகிறதென்பதன் கருத்தென்றும், இம்மாதத்தில் அனந்தமான நன்மைக் காரியங்கள் புரியப்படுவது கொண்டு மனிதர்களிலேற்படும் துர்ப்பழக்கம் இப்லீஸ் தன்மைகள் நீங்கிவிடுகிறதென்பது 'ஷைத்தான்'களுக்கு விலங்கிடப்படுகிறதென்பதன் கருத்தாகும் எனவும் கூறியிருக்கிறுர்கள்.



றமலான் மாதம்

இஸ்லாம் மதத்தின் ஐம்பெருங் கடமைகளுள் ஒன்றாகிய நோன்பை நிறைவேற்றுவதற் குரிய காலம் றமலான்தான். இந்த மாதத்தில் தான் திரு குர்ஆன் அருளப்பட்டது. இத் திருகுர் ஆன் உலக மன்பதைகளுக்கு இதுகாறும் செய்துள்ள ஊழியத்தை எழுதி முடிக்க முடியாது. இன்னும் எத்தனையோ நன்மைகள் இதனால் மனிதர்களுக்கு ஏற்படத்தான் போகிறது. ஆகவே, இஸ்லாமிய உலகில் இக் குர் ஆன் ஷரீபு ஏனைய நாட்களைப் பார்க்கினும், அதிகமாகவே இம்மாதத்தில் ஓதப்படும். மஸ்ஜிதுகளில் ஹாபிஸ்கள் திருகுர் ஆன் முழுவதையும் ஓதி தராவீஹ் தொழுகையை நிறைவேற்றுவார்கள். கிராமங்களாயினும், நகரங்களாயினும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் மஸ்ஜிதுகளுக்கு என்றுமில்லாதவாறு அவ்வளவு அதிகமாக ஜனங்கள் தொழப் போவார்கள். நோன்பு திறக்கும் நேரத்தில் மஸ்ஜிதுகளில் ஜனக்கூட்டம் அதிகமாக இருக்கும். மஸ்ஜிதுகளில் தீப அலங்காரங்களெல்லாம் அதிகமிருக்கும். சுருங்கச் சொல்லின், அந்நிய மதத்தினர் இக் காலங்களில் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மாலை நேரத்தில் வந்தால் இஃது முஸ்லிம்களுக்கு விசேஷமான நாள் என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொள்வர்.

இவ்வித காரியங்களெல்லாம் இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்றாகிய நோன்பின் பொருட்டினாலேயே ஏற்படுகின்றது. ஆனால், அந்த நோன்பை நிறைவேற்றுபவர் யாவர் என்பதாக நாம் உள்ளுக்குள் ஆராய்ந்து பார்த்தால், ஸ்திரீகளும், வயோதிகர்களும், குழந்தைகளுமே அதிகமாக இருப்பர். வாலிபர்களில் மிகச் சிலர்தான் நோன்பு வைப்பர். பணக்காரர்களில் மிகச் சிலரும், ஏழைகளில் மிகப் பெரும்பாலரும்தான் இந்நோன்பை நிறைவேற்றும் விஷயத்தில் சிரத்தைகொண் டிருப்பர். மற்றவர்களெல்லோரும் நாம் மேலே கூறியுள்ளபடி மஸ்ஜிதுக்கு வருவதிலும், வெளி ஆசாரங் காட்டுவதிலும் குறைவு செய்ய மாட்டார்கள்.

இவர்களை அணுகி, ஜனாப் அவர்களே! தாங்கள் தராவீஹ் தொழுகைகளைத் தவறாமல் தொழுகின்றீர்களே, ஏன் நோன்பு வைப்பதில்லை என்றால், வயிற்றுவலி என்றோ, உடம்புக்குச் சுகமில்லையென்றோ ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறுவர். அதாவது அவர்கள் கூறும் காரணத்தை நோக்கின், நோன்பு வைப்பதால், அவர்களின் நோய் அதிகப்படுவதாகவோ அல்லது நோய் உண்டாகுவதாகவோ அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. ஆனால், பிற மதவாதிகளும் வைத்தியர்களும் நோயாளிகளுக்கு நோன்பு மிகவும் ஏற்றது என ஒப்புக்கொண்டு, சில நோயாளிகளைப் பட்டினியாக இருக்கும்படியும் கூறுகிற இக் காலத்தில், நம்மில் நோன்பு வைக்க இஷ்டப்படாதவர்கள் மேற்கண்டவாறு காரணங் கூறுவதானது இஸ்லாம் மதத்தை இவர்கள் அவமதிப்பதைப் போலவே இருக்கிறது. எல்லாம் வல்ல இறைவன், நமது ஸ்தூல நிலை நமது அதிகாரத்தின்

கீழ் இருப்பதற்காகவே வருஷத்தில் ஒரு மாத காலம் பகற்பொழுதில் உண்ணு விரதமிருக்கும்படிக் கூறி இருக்கிறான். அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து உண்மையாகவே நோன்பு வைப்பவர்களையும், நோன்புவைக்க இஷ்டப்பட்டு, அதற்கியலாமல் இருப்பவர்களையும், நோன்பு வைக்க இஷ்டப்படாமல் போலிக் காரணங்களைக் கூறி,நோன்பு வைக்காமல் இருப்பவர்களையும் நன்கறிந்திருக்கிறான். பொதுஜனங்களிடம் ஏதேனும் சாக்குப் போக்கைக் கூறிவிடலாம்; அவர்களை ஏமாற்றிவிடலாம். ஆனால், அல்லாஹு தஆலாவை ஏமாற்ற முடியாது. போலிக் காரணங்களை அவனிடம் கூற முடியாது. அப்படிக் கூறினாலும், அவைகள் அங்கீகரிக்கப் படவு மாட்டா.

மனிதர்களாகிய நாம் நோன்பு வைப்பதாலோ அல்லது நோன்பு வைக்காமலிருப்பதாலோ அல்லாஹு தஆலாவிற்கு எவ்வித லாபமோ, நஷ்டமோ கிடையாது. லாப நஷ்டத்தை அடைபவர் நாம்தான். ஆகவே, நாம் நமது மறுமைப் பயனை விரும்பியேனும், இறைவனது கட்டளைக்குப் பணிய வேண்டாமா? என்பதை நம் சகோதரர்கள் கவனிப்பார்களாக.

இம்மாதத்தில் எங்கும் தானதர்மங்கள் கொடுக்கப்படும். றமலான் மாதத்தின் 'லைலத்துல் கத்ரி'யாகிய 27ம் தேதியின் இரவு நெருங்க நெருங்க ஏழை எளியார்களின் கூட்டங்களை தனம் படைத்த கிராமங்களில் பார்க்கலாம். தனம் படைத்தவர் தங்கள் பொருளுக்கு ஜக்காத் வரியைப் பெரும்பாலும் இந்த மாதத்திலேயே கொடுக்கின்றனர். அதுவும் பகிரங்கமாகச் சில நூறு ரூபாய்களைச் சில்லரை மாற்றிக்கொண்டு 1 அணா, 2 அணா, கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் என்று பணமாகக் கொடுப்போரும் உண்டு, பீஸ் துணிகளை வாங்கிக் கொடுப்போரும் உண்டு. இவ்விதமாகக் கொடுக்கும் தர்மத்தை ஜக்காத் கணக்கில் வைத்துக்கொள்கிறார்கள். ஆனால், ஜக்காத் கொடுக்கவேண்டிய முதல் தங்களிடம் எவ்வளவிருக்கிறது? தாங்கள் கொடுக்கும் பணத்தையோ துணியையோ வாங்குபவர்கள் ஜக்காத்து வாங்க அருகதை யுள்ளவர்களா? என்பன போன்ற காரியங்களைக் கவனிப்பதில்லை. ஏழை எளியார்களிலும் பலர் றமலான் மாதத்தில் ஜக்காத் வாங்குவதற் கென்றே பல மைல்கள் நடந்து சென்று, அந்நிய ஊர்களில் தெருக்களிலும் சத்திரங்களிலும் கூடத் தங்குகிறார்கள். இவ்வித முறையில் தானதர்மம் செய்வதையும், அவைகளை வாங்குவதையும் அடியுடன் நிறுத்திவிட வேண்டுமென்று யாம் சொல்ல விரும்பவில்லை. தானதர்மங்களைச் செய்யுங்கள், உங்கள் மீதுள்ள ஜக்காத் கடமையை நிறைவேற்றுங்கள், றமலான் மாதத்தில் அதனை நிவைவேற்றி ஒன்றுக்குப் பத்து, நூறு மடங்கு நன்மைகளைப் புரியுங்கள் என்றே யாம் கூறுவோம். என்றாலும், பிற மதத்தார் நம்மைக் கேவலமாக நினைக்கக்கூடிய விதத்தில் இதனைச் செய்யவேண்டாம் என்றே கேட்டுக் கொள்கிறோம். இயல்பும் சக்தியுமுள்ள அநேகர் இலவசமாகத் துட்டும் துணியும் கிடைப்பதைக் கருதி ஊர் ஊராக அலைவதால், நியாயமாக ஜக்காத்தை அடைய அருகதை யுள்ளவர்கள் அதனை அடையாமல் இருந்து விடுகின்றனர். ஆதலால், தர்ம சிந்தையுள்ள கனவான்கள் இத்தான தர்மங்களைச் சாதாரணமாகச் செய்ய முற்படுவதாலேயே இக் கஷ்டங்களேற்படுகின்றன. தங்கள் மஹல்லாவிலும், ஊரிலும், பந்துக்களிலுமுள்ள ஏழைகளை முதலில் கவனித்து, அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்துவிட்டு, அப்புறம் வெளியாரைக் கவனிக்கின், இதன் புண்ணியம் எத்தனையோ அதைவிட நூறு மடங்கு அதிகமாக இருக்கும். ஏனெனில், ஒவ்வொரு

வருக்கும் தங்கள் இனஜன பந்துக்களை யும், உற்றார் உறவினர்களையும் கவனிக்க வேண்டிய கடமை இருக்கிறது. ஆகவே, இவர்களில் ஜக்காத் முதலை வாங்க அருகதை யுள்ளவர்களுக்கு இவைகளைக் கொடுத்தால் ஜக்காத்தும் நிறைவேறி விடுகிறது, பந்துக்களை ஆதரித்த புண் ணியமும் கிடைக்கிறது. ஆதலால், இவ் விஷயத்தில் நம்மவர் அதிக சிரத்தை காட்டி அதிகப் புண்ணியங் கிடைப்ப தற்குரிய வழியைக் கடைப்பிடிப்பார் களாக.

எகிப்தி "மஹ்தீ"

அஹ்மது பஹ்மீ அல் பாஜுரி என்ற ஒரு எகிப்தியர் தன்னைக் கடைசிக்காலத்து "மஹ்தீ" என்பதாக தாவாச் செய்வதாய் எகிப்துப் பத்திரிகைகளிலிருந்து தெரிய வருகி றது. இவர் எகிப்து கல்வி இலாக்காவில் கிளர்க்குவேலைபார்த்தபோது, பைத்தியம்பிடித் திருப்பதாகத் தெரிந்து உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்டவர். இவர், இதற்கு முன்னர் பொய்யாக தாவாச் செய்த "மஹ்தீ"களின் போக்குக்கு நேர் மாறாக தாடியை மழுங்கச் சிறைத்துவிட்டு, ஐரோப்பிய உடைதரித்திருக் கிறாராம். இவரை "அத்துன்யா" என்ற பத்தி ரிகையின் நிருபர் பேட்டிகண்டு சம்பாஷணை செய்த விபரம் இங்கு குறிப்பிடப்படுகிறது. இச் சம்பாஷணையிலிருந்து இவரைப் பைத்தி யக்காரர் என்பதாக எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளமுடியும். என்றாலும், நமது நாட்டி லுள்ள சில மார்க்க நெறி தவறியவர்கள் தங்க ளது வழி கெட்ட கொள்கைகளுக்கு வெகு தூரத்திற்கப்பாலுள்ள அநாதிப் பேர்வழி எவ ரேனும் எழுதும் வியாசங்களையும் புத்தகங்களை யும் மேற்கோளாக எடுத்துக்கூறும் வழக்கமிருப் பதால், இப் பைத்தியக்காரர்களின் தாவாக்களை யும், வியாசங்களையும் தங்கள் வழி கெட்ட கொள்கைகளுக்கு ஆதாரமாக எடுத்தெழுதி விடக்கூடு மாதலின், முற்கூட்டியே இந்த எகிப்து "மஹ்தீ"யை வாசக நேயர்களுக்கு அறிமுகப்படுத்திவிட விரும்புகிறோம். (ப.ர்.)

அப் பத்திரிகையின் நிருபர் கூறும் விபரம் வருமாறு:—

"அஹ்மது பஹ்மீ அபந்தியை நான் பார்த்தவுடன், அவர் எவ்விதக் கோலத்தி லிருப்பாரென்று நான் நினைத்திருந்தேனே அதற்கு நேர் மாறாக அவ்வரைநான் கண்டேன். அவர் "உலகப் பிரசினை" என்பதாக ஒரு புஸ்த கம் எழுதி இருப்பதாகவும், அப்புத்தகத்தில் "கல்வி இலாக்கா மந்திரிச்சபை என்னும் படகி லிருந்து ஈமானுடைய சக்தி முஃஜிஸாக்களைக் காண்பிக்கிறது" என்று எழுதி இருப்பதாகவும் நான் கேள்விப்பட்டிருந்தேன். அவர் இப்புத்த கத்தை எகிப்து பார்லிமெண்டின் இரு சபைக ளின் அங்கத்தினர்களுக்கும் விநியோகம் செய் திருப்பதாகவும்அறிந்தேன். கடைசி காலத்தில் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டுக்கொண் டிருக்கிற மஹ்தீதான் நான் என்று அவர் அறிக்கை செய்ததுடன், ஒரு தேசிய மகாநாட் டைக் கூட்டி, எகிப்திற்கும் உலக முழுவதற் கும் தன்னைச் சர்வாதிகாரி என்பதாக அம்மகா நாட்டில் அங்கீகரிக்கவேண்டும் என்பதாகக் கோரி இருப்பதாகவும் தகவல் தெரிந்திருந் தேன்.

இவர் பயித்தியம் பிடித்தவராக இருக்கக் கூடும். இவரது நடையுடை பரிகசிக்கத் தகுந்த தாக இருக்கக்கூடும் என நான் நினைத்திருந் தேன். ஆனால், இவரை யான் பார்த்தபோது இவர் மிகவும் தேக சவுக்கியமுள்ளவராகவும், நாகரீக மடைந்தவராகவும், பேஷனபிள் ஜென் டில்மேனாகவும் இருந்தார். அவர் தனது புதல் வரின் அசசு யந்திரச் சாலையில் மிகக் கம்பீரமாக வீற்றிருந்தார். அவர் என்னை மிகப் பெருமை யுடன் வரவேற்றார். "அத்துன்யா" என்ற பத் திரிகையின் வாசகர்களுக்கு தாங்கள் ஏதேனும் சமாசாரம் தரவேண்டும் என்று நான் அவரைக் கேட்டபோது, அவர் கொல்லென்று சிரித்துக் கொண்டு, "நீங்கள் சரியான சந்தர்ப்பத்தில் வந்தீர்கள்." என்று கூறித் தமது மேஜைக்

கெதிரில் எழுந்து நின்றுகொண்டு, பிரசங்கிகளைப்போல் உரத்த சப்தத்தில் பின்வருமாறு கூறினர்.

"பத்திரிகை நிருபர்களே! முழு உலகத்தின் நன்மைகளைப் பாதுகாக்கக்கூடிய அறிவு ஞானங்களுடன் இறைவன் அனுப்பியுள்ள மனிதர் ஏதேனும் செய்து விடமுடியுமா? அம்மனிதர் தனது திறமைகளினுல் முழு உலகத்திற்கும் அதிகாரியாகிவிட முடியுமா? என்பதை நீங்கள் ஒருமுறை இருமுறையல்ல, நூறுமுறை நன்கு யோசித்துப் பாருங்கள். உலகத்தை ஜெயித்துவிடக்கூடிய அபார அறிவுள்ள அவர் என்னதான் செய்யமுடியாது. அவரது இருதயம் எல்லா மனிதருடைய இருதயங்களைப் பார்க்கினும் அதிக விசேஷமுள்ளது. அவரது பேனு வன்மை எவ்வாறுளது என்பதை அவருடைய "உலகப் பிரசினை" என்ற புத்தகத்தில் நீங்கள் நன்கு பார்த்திருக்கிறீர்கள். ஆம், சந்தேகமில்லாமல், அந்த மனிதர் தனது அற்புதமான திறமைகளாலும் நிகரற்ற தன்மைகளாலும் தனது நியாயமான உரிமையை அதாவது மனித வர்க்கத்திற்குத் தலைமை வகிக்கும் அந்தஸ்தை, நிச்சயமாக அடைந்துவிட முடியும்" என்று கூறினர்.

இந்த இடத்திற்கு வந்தவுடன் அந்தக் கடைசி காலத்து "மஹ்தி"க்கு ரொம்ப ஜோஷ் வந்துவிட்டது. அவர் தமது கையை மிகப்பலமாக ஓங்கி மேஜையின்மீது அடித்துப் பின்வருமாறு கூறினர்:—

"பத்திரிகைக் காரர்களே! "உலகப் பிரசினை" என்ற புத்தகம் மிகவும் மூக்கியமான விஷயங்களைக் கொண்டது; அதில் கூறப்பட்டுள்ள அபிப்பிராயங்கள், எனது கைகளால், முழு உலகத்தின் நிர்வாகத்தில் பூரணமான மாறுதலை உண்டாக்கிவிடும்" என்று உங்கள் பத்திரிகையின் முதற் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் பிரசுரியுங்கள். ஜாக்கிரதை, என் விஷயத்தில் அசிரத்தையாயிருக்காதீர்கள். இந்த அசிரத்தையின் பயனுக நானும் அழிவேன், நீங்களும் அழிந்து விடுவீர்கள், மனிதவர்க்கம் முழுவதுமே அழிந்துவிடும்?

இதனைக் கேட்டவுடன் கடைசி காலத்து இந்த "மஹ்தி" தனது முஷ்டியினுல் என் தலையை எங்கே உடைத்து விடுவாரோ என்ற பயம் எனக்குண்டாகிவிட்டது. ஆதலால், நான் மிகவும் வணக்கத்துடன்,

"எல்லாப் பத்திரிகைகளும் இவ்வுலகத்தின் தலைவர் சமூகத்தில் கை கட்டிக்கொண்டு ஆஜராக இருக்கின்றன; இவ்வுலகத்தின் தலைவரது எக்கட்டளையையும் எந்த க்ஷணத்திலும் நிறைவேற்றுவதைத் தங்கள்மீதுள்ள கண்டிப்பான கடமை என்பதாக்க் கருதுகின்றன"

என்று கூறினேன். அப்பொழுது, கடைசி காலத்து "மஹ்தி"யின் மூஞ்சியில் அமைதிக்குரிய அடையாளங்கள் தோன்றின. ரொம்ப கிருபைகூர்ந்து என்னை உட்கார்ந்து கொள்ளும்படி சமிக்ஞை செய்தார். நான் உட்கார்ந்து கொண்டு,

"உலகத்தின் தலைமைப் பதவியை அடைந்துள்ளதின் அடையாளங்கள் ஹுஜூர் அவர்களுக்கு எப்பொழுது வெளியாயினவென்பதை சமூகம் ஹுஜூர் அவர்களது நாவிலிருந்து கேட்க முடியுமா?"

என்று கூறினேன். அதற்கு "மஹ்தீ" அவர்கள்,

"சென்ற 1911-ல் எனக்கு சர்க்கார் ஸ்கூல்களில் தேகப் பயிற்சி கற்பிக்கும் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. அச்சமயத்தி விருந்தே எனது மூளைச் சக்திகளனைத்தையும் சமூகஸ்தாபனத்தின் குறைகளைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் செலவு செய்ய வாரம்பித்து விட்டேன். அப்புறம் 1924-வூத்தில் அறிவு ஞானம் சம்பந்தமாக வெகுதூரத்தை நான் கடந்து விட்டேன். அல்லாஹுத்தஆலாவுக்கு குர்பு, முடுகுல் என்று சொல்லக்கூடிய அநேக அந்தஸ்துகளைக் கடந்து "மகாமே ஷுஹூத்" (பிரத்தியக்ஷ ஸ்தானம்)வரை வந்துவிட்டேன். அச்சமயத்திலிருந்து நான் ஜனங்களுக்கு "என் பரிசுத்த ஆலோசனைகள் மனித உலகிற்குத் தலைமை வகிக்கும்படி என்னை அவசியம் செய்துவிடும், நான் சர்வதேசங்களினுடையவும், சர்வ ஜனங்களினுடையவும் பிரசினைகளை முற்றிலும் சரியான முறையில் ஒழுங்குபடுத்திவிடுவேன்" என்று கூறிவருகிறேன். அப்புறம் நான் புத்தகங்களையும், அறிக்கைகளையும் வெளியிடத்தொடங்கினேன். 'சர்வதேசங்களினுடையவும், சர்வசமூகத்தாரினுடையவும் சங்கடங்களை நான் மட்டிலும்தான் தீர்த்துவைக்க முடியும், எனது மூலமாக மட்டிலுமே முழு உலகத்தின் நன்மைகளும் பாதுகாக்கப்படும்' என்று உலகினுக்குத் தெளிவு படுத்திவிட்டேன் என்று கூறினர்.

அப்பொழுது நான் அவரை நோக்கி,

"மிகப் பெரிய சர்தாரும், மகத்தான மஹ்தீயுமான தாங்கள் இவ்வுயர் பதவியை அடைந்ததற்

காகத் தங்களை வாழ்த்துகிறேன். என்றாலும், தங்களது இவ்வழைப்பை எத்தனை செவிகள் கேட்டு அங்கீகரித்திருக்கின்றன வென்பதைத் தெரிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன்"
என்று கூறினேன். அதற்கவர், மிக அலக்ஷியமான தோரணையில்,

"பெரும்பாலான ஜனங்கள் ஒன்றையும் தெரியாதவர்கள். ஏனெனில், அவர்களெல்லோரும் பயித்தியக்காரர்களாக இருக்கின்றனர். கல்வி இலாகா மந்திரிசபைக்குங்கூட பயித்தியம்தானிருக்கிறது. இப்பூமண்டலம் முழுதும் எனக்கு தெய்வசகாயமாகக் கிடைத்த உடமை. நான்தான் எல்லா மனிதர்களுக்கும் வழிகாட்டமுடியும் என்று நான் அடிக்கடி வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறேன். ஆனால், மந்திரிசபை அதனை விளங்கிக்கொள்ள முயற்சி செய்யாததுடன் நேர்மாறாக, எனது மூளையைப் பரிசீலனைசெய்து பார்க்கும்படி என்னை வைத்திய போர்டுக்கு அனுப்பிவைத்தது. ஆனால், எனது மூளை அதன் அளவிற்கதிகமாகவே சரியாக இருக்கிறது என்றே டாக்டர்கள் ஒவ்வொரு முறையிலும் ஏகமனதாக அபிப்பிராயங் கூறினர். அப்படிக் கூறிய பிறகும் கல்வி இலாகா மந்திரிக்குச் சந்தேகம் தீரவில்லை. அவர் மறுபடியும் என்னை வைத்தியப் பரிசீலனைக்குட்படுத்த விரும்பினார். ஆனால், நான் இம்முறை இதனை எவ்வகையிலும் சகித்துக்கொண்டிருக்கமுடியாது என்று தெளிவாகக் கூறி மறுத்ததுடன், எனது உத்தியோகப் பதவியையும் ராஜீனாமாச் செய்துவிட்டு, புது மாதிரியில் ஒரு ஸ்கூலை ஸ்தாபித்தேன். மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வந்தது.

நான் இந்த ஸ்கூலை நமூனாவாகவே ஏற்படுத்தி இருந்ததால், அதில் நான் ஏற்படுத்தியிருந்த கல்வித்திட்டத்தை கல்வி இலாக்கா மந்திரிக்குச் சமர்ப்பித்து, எல்லா ஸ்கூல்களிலும் இதனை அமுல் நடத்தும்படி கோரினேன். ஆனால் கல்விஇலாகா மந்திரி பித்துக்கொண்டவராகி, என்னை நோக்கி "உமக்கு முழு உலகத்தின் கவலை என்னத்திற்கு? உம்மையும் உமது மக்களையும் பற்றி மட்டிலும் கவனம் செலுத்தினால் போதும்" என்று கூறிவிட்டார். அதன் பேரில் எனக்கு வேறுவழி யில்லாததால் அந்த ஸ்கூலை நான் நிறுத்திவிட்டேன். இவ்விதமாக நிகரற்ற அந்த கல்வித்திட்டம் நாசமாகப் போய்விட்டது. என்னுடைய இத் தோல்விக்கு அசல் காரணம் பொதுஜனங்கள் உணர்ந்துகொள்ள முடியாத அவ்வளவுக்கு உயர்தரமான தத்துவங்களை நான் சமர்ப்பிப்பதுதான். இதனால்தான் அவர்கள் என்னைப் பயித்தியக்காரன் என்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள்தான் பயித்தியக்காரர்களாக இருக்கின்றனர்" என்று கூறினார்.

இதன்பேரில் நான் அவரை நோக்கி,

உலகிற்கு தலைமை வகித்து வழிகாட்டுவதால் தாங்கள் எக்காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்புகிறீர்கள்?
என்று வினவினேன், அதற்கவர்,

"இப் பூமண்டலத்தை கல்வி, பிரகாசம், நீதி, சீர்திருத்தம் ஆகியவைகளால் நிறப்பிவிட வேண்டும்; உலக அரசாங்கங்களின் ஆட்சி முறைகளைச் சீர்திருத்த வேண்டும், குழப்பம் என்பதே இல்லாமற் போகவேண்டும்" என்று நான் விரும்புகிறேன். ஏனெனில், மனித உலகில் நான்தான் அல்லாஹுத்த ஆலாவின் யாவற்றினும் பெரிய பொக்கிஷமாக இருக்கிறேன், உலகினுக்கு விடுதலை அளிப்பவன். இக்காரியங்களுக்குப் பிறகு, இன்னும் அதிக முக்கியமான காரியத்தின்பால் கவனம் செலுத்துவேன் என்று கூறினார். அதற்கு நான், உயர்தரமான அந்தக் கடைசி நோக்கம் யாது? என்று வினவியதற்கு, அவர் என்னை ஒரு மாதிரியான ஆச்சரிய நோக்குடன் பார்த்துக்கொண்டு,

"இறைவன் என்னை நரகச் சங்கிலிகளால் பூமியுடன் கட்டிவிட்டிருக்கின்றான். இச்சங்கிலிகள் இல்லாதிருப்பின், நான் இந்தப் பூதவுடலுடன், ஆத்மாவாகிய இறக்கையால், எப்பொழுதே வானத்திற்குப் பறந்துபோயிருப்பேன் என்பதை அவன்தான் அறியமுடியும். எனது கல்வி ஞானத்தின் பலத்தால் "எல்லா மக்களுக்கும் நான்தான் தலைவன் என்று அங்கீகரிக்கவேண்டும்" என்று அல்லாஹுத்த ஆலாவைக் கோரிக்கொண்டிருப்பேன்."

என்றுகூறி இவர் எழுந்து நின்றுகொண்டார். நானும் நின்றுகொண்டேன். அவர் வேறு எதையும் சொல்ல எனக்குச் சந்தர்ப்பமளிக்கவில்லை. ஆதலால், அவர் "நான் அல்லாஹுத்த ஆலாவினிடமிருந்து வந்திருக்கிறேன்; எனது அற்புத சக்தியைக் காண்பித்து தத்துவ சாஸ்திரிகள், சிந்தனையாளர்கள், விஞ்ஞானிகள் ராணுவத் தலைவர்கள் ஆகிய யாவரையும் அறைகூவி அழைக்கிறேன்" என்று சப்தமிட்டுக் கூறினார்.

அதற்கு நான் "தங்களுடைய இவ் வற்புத சக்தி எப்பொழுது வெளியாகும்?" என்றேன். அதற்கவர் "சில மாதங்கள்வரை பொறுத்துக் கொண்டிருங்கள். எனக்கு பென்ஷன் கிடைத்து விடட்டும், அப்புறம் உலகில் என்ன நிகழுகிறது? என்பதைப் பார்த்துக்கொள்," என்று கூறினர்.

அப்பொழுது நான் "அச்சமயத்தில் என்னை மறந்துவிடக் கூடாது என்பதாக ஸர்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்." என்றேன். அதற்கவர் என்னைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு, "உமது திறமையும் தன்மையும் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்குத் தக்கவாறு என்னிடத்தில் நீர் கேட்ப தெல்லாவற்றையும் நான் கொடுப்பேன். ஆனால், தயவு தாட்சண்யம், அநீதி ஆகியவை என்னிடம் செல்லாது" என்றார். அப்பொழுது நான், அவருக்கு நன்றி செலுத்தி விட்டு "அத்துன்யா" பத்திரிகைக்கு அவர் கைப்பட ஏதேனும் செய்தி எழுதித்தர வேண்டும்" என்று நான் கேட்டுக்கொண்டேன். உடனே, அவர் உட்கார்ந்துகொண்டு, 6 பக்கங்கள் நிறைய மிக வேகமாக எழுதி என்னிடம் கொடுத்தார். அதனை வாங்கிக்கொண்டு நான் வந்துவிட்டேன். மேலேயுள்ள சம்பாஷணையில் கண்ட விபரங்கள் தான் அக்காகிதங்களில் எழுதப்பட்டிருந்தது. வேறு விசேஷமாக அவர் ஒன்றையும் எழுதவில்லை."

குறிப்பு:—இச்சம்பாஷணையிலிருந்து, மஹ்தீ வேஷம் போடுவதும், மற்றபடி தன்னை நபி என்று தாவாச்செய்வதும் யாவும் பணத்தைத் தேடுவதையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது புலப்படுகிறது. இவ்விதமாக நம் நாட்டிலும் சில கபட சந்நியாசிகள் தங்களை மஹ்தீ என்றும், ஒலி என்றும் கூறி தந்திரமாகப் பொது ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றனர் என்பது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கட்டும். ஆகவே, நண்பர்கள் இவ்வித கபடர்களின் மாய வலையில் சிக்காது ஜாக்கிரதையாக இருந்து கொள்வார்களாக.

மேனாட்டு யாத்திரையின் பயன்

(சென்ற செப்டம்பர்மீ தொடர்)

அந்த உத்தியோகஸ்தரான ஆங்கில இன்டியன் அந்தோனியாவான அந்த ஸ்திரியுடன் கூடிப் பழகுவதை யாவரும் சந்தேக நோக்குடனேயே கவனித்து வந்தார்கள். இந்நிலைமையில் அந்தோனியாவுக்குப்பின் இவ்வுத்தியோகஸ்தரும் ஐரோப்பாவுக்குச் சென்றது மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்திவிட்டது. இச்சம்பவம் ஜுபரின்மனதில் ஆணிவேர்போல் பாய்ந்துவிட்டதால் அவன் நாணமுற்று கூட்டம் பார்ட்டி முதலியவைகளுக்குச் செல்வதை அறவே விட்டு விட்டான். அந்தோனியா லண்டனில் ஆறுமாதம் வரை தங்கியிருந்தாள். இதற்கிடையே ஜுபரின் இந்திய நண்பர்களிடமிருந்து அந்தோனியாவின் நடவடிக்கை சம்மந்தமாக வந்த கடிதங்களை அவன் பார்த்துப் பார்த்து மட்டில்லா துக்க சாகரத்திலாழ்ந்து சதாவும் கவலையுடையவனாகவே யிருந்தான்.

இந்நிலைமையில் அந்த ஸ்திரீ லண்டனிலிருந்து திரும்பி வர முற்பட்டு நமது ஜுபருக்கு ஆகாய விமானம் மூலம் ஓர் தபால் அனுப்பியிருந்தாள். அதில் அவள் குறிப்பிட்டிருந்ததாவது:—

"அருமை ஜுபரே! தங்களைவிட்டு யான் பிரிந்திருந்த சில காலத்தை இன்பமில்லாத சந்துஷ்டியற்ற முறையில் அதிக விசனத்துடன் கழித்தேன். தாய் தந்தையர்களின் வாஞ்சை என் உணர்ச்சிக்கு இடையூறு விளைவித்துவிட்டது. அவ்வாஞ்சை என்னை வசப்படுத்திக்கொள்ளாவிடின் யான் ஒருக்காலும் தங்களைவிட்டுப் பிரிந்திருக்கப் போவதில்லை. என்றாலும், தங்கள் அன்பே என் மனதைக் கவர்ந்து நின்றது. தாங்களில்லாது என் மனம் நிம்மதியடையாது. இதுபொழுது யான் இந்தியா வந்து கொண்டிருக்கிறேன். சந்திப்பின் நேரம் அதி சமீபித்து வருகிறது. தாங்கள் என்னை இந்தியாவுக்கு அழைத்

திச் சென்ற போது கடல் யாத்திரை மிக இன்பமாக கழிந்து வந்தது. இதுபொழுது யான் தனியாக வருகின்றேன். கடல் அலைகள் மீது சந்திர ஒளி வீசுவதைக் கண்டு என் உணர்ச்சி எவ்வாறிருக்குமென்பதை நினைக்க என் மனம் துக்கமடைகின்றது. கப்பலில் ஏற்படும் டான்ஸ் ஆட்டங்களின் நேரத்தில் தாங்கள் அதிகமாக என் மனதை கொள்ளை கொள்கிறீர்கள். என் காம உணர்ச்சி தங்களின் அழகு பொருந்திய முகாரவிந்தத்தைத் தேடிக்கொண்டே இருக்கிறது. யான் தங்களுக்காகவே, தங்கள் மீதேற்பட்டுள்ள விருப்பத்திற்காகவே வந்து கொண்டிருக்கிறேன்!! வருகிறேன்!!

தங்கள் அன்புள்ள அந்தோனியா.

நமது ஜுபரின் ஹிருதயமோ அந்தோனியாவின் மீது மிக மிக வெறுப்புக்கொண்டதாகவிருந்த போதினும், இக்கடிதத்தை வாசித்தவுடன் அவனது மனம் முழுதும் பெரும் மாறுதலடைந்து விட்டது. அவன் அந்தோனியாவின் உருவப்படத்தை பல தடவை முத்தியிட முற்பட்டான். அவளால் வரைந்து அனுப்பப்பட்ட கடிதம், கடிதமாகவில்லாது அவனை வசப்படுத்தும் ஜாலக்கயிறு போலாய்விட்டது. இந்த ஜால கயிறு ஜுபருக்கேற்பட்டுள்ள பற்பல சந்தேகங்களையும் அகற்றி கனவுபோலாக்கிவிட்டது. அவன் அந்தோனியாவை சந்தோஷத்தோடு வரவேற்றான். அவள் திரும்பி வந்ததின் சந்தோஷ அறிகுறியாக ஆடம்பர விருந்தளிக்க முற்பட்டு அதன் தொடர்பு பற்பல நாட்கள் வரை இருக்கும்படி செய்தான். சுருங்கக்கூறின், நமது ஜுபரின் சந்தோஷ உணர்ச்சி மிதமிஞ்சிய எல்லையை அடைந்துவிட்டது.

இதற்குப்பின்னுகிலும் அந்தோனியா தன் பழக்க வழக்கங்களை செம்மைப்படுத்திக் கொண்டு சீரிய முறையில் நடந்துவர முற்படுவாளாகில் நமது ஜுபரோ முந்திய காரியாதிகளை யெல்லாம் மறந்துவிட்டு அவளுக்கடிமையாகிவிடுவான். ஆனால், அந்தோனியா அவ்வாறு நடக்கக்கூடியவளா? தன் பழைய செய்கைகளிலீடுபட்டு, அவைகளைப் புதுப்பிக்க முற்பட்டாள். ஐரோப்பா சென்றிருந்த ஆங்கில இந்திய அதிகாரியும் திரும்ப வந்துவிட்டான். ஐரோப்பிய சுயேச்சையைக் கையாள முற்பட்டாள். ஒரு நாள் அதே ஆங்கில இந்தியனுடன் அவள் வேட்டைக்காக வெளியிற் சென்று ஒரு வாரம் சென்று திரும்பி வந்தாள். ஜுபருக்கே தன் மனைவியின் இச்செய்கை மிக மிகப் பொருத்த மற்றதாகத் தெரிந்தது. இதனால் ஜுபர் அவள் மீது கடுமையான சினங்கொள்ள முற்பட்டான். அந்தோனியா இவனுடைய கடுமொழிகளுக்கு யாதொரு விடையும் கொடாது மௌனமாகவிருந்துவிட்டு மறுநாள் அங்குள்ள ஜில்லா கலெக்டரிடம் சென்று ஜுபர் தன்னுடன் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை எனத்தெரிவித்துக்கொண்டாள். உடனே கலெக்டர் ஜுபரை அழைத்து பல வாறான பேச்சுகள் பேசி முடிந்தபின்,

"பாரிஸ்டர் சாஹிப்! நீர் உமது பெண் சாதியை அதிகக் கஷ்டப்படுத்துகிறீர்; அவளை இந்தியப் பெண்களைப் போல் சிறையிட்டு வைக்க முற்படுகின்றீர் என்ற சமாச்சாரம் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நீர் உமது இச்செய்கை மீது மறுபடியும் கவனத்தைச் செலுத்தி ஜாக்கிரதையாக நடந்து கொள்வீராக! இல்லாவிடின், யான் உமது காரியத்தில் தலையிடும்படி நேரிடும். இது என்னுடைய முந்தியவும் கடைசியானவுமான எச்சரிக்கையாகும்" எனக்கூறினர்.

ஜுபரோ தான் நிரபராதி என்பதை ருஜுப் படுத்துவதற்கு எவ்வளவு தூரம் முயன்றும் யாதொரு பிரயோஜனமுமேற்படவில்லை. ஓர் ஐரோப்பிய கலெக்டர் தன் இனத்தைச் சார்ந்த ஐரோப்பிய மாதிற்கு பாதகமாய் இந்திய புருடர் விஷயத்தில் எவ்வாறு நீதி வழங்கப்போகிறாரென்பது நேயர்களுக்குத் தெரியாத விஷயமன்று. ஜுபர் கோபாக்கினிதழும்பியவனுய் தன் வீடு திரும்பிவந்து அந்தோனியா விஷயத்தில் சற்றும் தலையிடாது வாய்பொத்தி மௌனமுற்றிருந்தான். சுருங்கக் கூறின், அவளது சகல செயல்களும் இவனது வாழ்க்கையை சங்கட நிலையிலாக்கி வைத்துவிட்டது.

ஒருநாள் கோர்ட்டு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. அந்தோனியா வெளியிற் சினேகிதர் வீடு சென்றிருந்தாள். ஜுபரோ பங்களாவின் வெளிப்புற ஹாலில் உட்கார்ந்துகொண்டு சட்ட ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். இதற்கிடையே தபாற்காரன் மத்தியான போஸ்ட்களை எடுத்துக்கொண்டுவந்து, அந்தோனியா பெயருக்கு லண்டனிலிருந்து அவளுடைய நண்பனொருவனல் ஆகாய விமானம் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தை ஜுபரிடம் கொடுத்தான். ஐரோப்பிய நாகரீகத்தில், பெண்சாதிக்கு வரும் கடிதங்களை புருடன் பிரித்துப் பார்ப்பதற்கும் அதனை வாசிப்பதற்கும் அனுமதி

மறுக்கப்பட்டிருப்பதால், நமது ஜூபரும் அச்சட்டத்தைப் பின்பற்றியே நடந்து வந்தாலும் அன்றையதினம் வழக்கத்திற்கு விரோதமாய் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்துக்கொண்டே போகிறான், அவனுடைய முகம் அக்கி சுவாலை விட்டெரிய முற்பட்டு பெரும் மாறுதலடைந்துகொண்டே வருகிறது. அக் கடிதத்திலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் இவனது ஹிருதயத்தில் அம்பேற்றுவதுபோல் காணப்படுகிறது. அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"அருமை அந்தோனியா! தாம் இங்கிருந்து சென்றது முதல் என் வாழ்க்கை நிம்மதியற்றதாகவிருக்கிறது. நீ அதிசீக்கிரம் திரும்பி வருவதாகக் கூறிப் போயும் இன்று நான்கு மாதங்கள் கடந்துவிட்டது. தாம் இவ்விடம் விட்டு சென்றபின் ஒரே கடிதம் எழுதிவிட்டு, கடிதத்தின் துடர்பை அறுத்துவிட்டிருக்கிறாய். அந்தோனியா! நீ எவ்வளவு அழகு சௌந்தரியமுடையவள்! என் மீது எவ்வளவு அன்புடையவள்! உம்முடைய காம இச்சை எவ்வளவு மனோ கவர்ச்சியைக் கொடுக்கவல்லது! உமது உதடு எவ்வளவு அழகு பொருந்தியது! நாம் ஒன்றுகூடி உல்லாசமாகக் கழித்த இரவுகள் என் ஞாபகத்துக்கு வந்துவிட்டால் நிம்மதியற்ற நிலை ஏற்பட்டுப் போகிறது. நாம் உல்லாசத்தோடு கழித்த இரவுகள் திரும்பி வரப் போகிறதா? யான் அனுப்பிய மருந்து அவசியம் பிரயோசனமளித்திருக்குமென்றும், உமக்கும் உமது மனையானுக்குமுள்ள சம்மந்தத்திலேற்பட்டுள்ள ஒற்றுமைக் குறைவு, பிணக்கு இவைகளை விட்டு நீங்கியிருப்பாய் என்றும் நினைக்கிறேன். அதிசீக்கிரம் பதில் எழுதுவாய் என மிக மிக எதிர்பார்த்தவளாக இருக்கிறேன்".

நமது ஜூபரோ இக் கடிதத்தை வாசித்துவிட்டு பைத்தியக்காரன்போல் அந்த தாழ்வாரத்தில் அங்கு மிங்குமாக ஓட ஆரம்பித்தான். ஆரம்பமாக கொலைகுற்றம் புரிந்தவனின் அறிவு தடுமாறுவது போல் இவனும் தடுமாற்றமடைந்தான். இந்நிலைமையில் அவனுடைய நண்பர்களிலொருவன் அங்குவந்தான். ஜூபரின் இந்நிலைமையைக்கண்டு அவனுக்கு பல ஆறுதல் கூறி, கோபம் சற்று தணியும்படி செய்தான். மேலே குறிப்பிட்ட கடித விஷயமாய் அவ்விருவரும் வெகுநேரம் ஆலோசனை புரிந்து கடைசியாக அன்று மாலை ஜூபர் கலெக்டரிடம் சென்று அக் கடித விஷயத்தைத் தெரிவிக்கவேண்டியது என்னும் முடிவுக்கு வந்தனர். இதற்கேற்ப ஜூபர் அன்றுமாலை கலெக்டரிடம் சென்று விஷயத்தைத் தெரிவித்தான். கலெக்டர் இவனது மொழிகளைச் செவியுற்றபின், கடுகடுத்த முகத்தோடு ஜூபரை நோக்கி,

பாரிஸ்டர் சாஹிப்! உமது மனைவியின் அனுமதியின்றி அவளுடைய கடிதத்தைப் பிரித்துப் பார்த்தது கொண்டு ஒரு குற்றம் புரிந்திருக்கிறீர்; எந்த வகையிலும் அவளுடன் நீர் வாழ்க்கை நடத்துவதற்கு விரும்பாது அவளை விவாக ரத்து செய்துவிடுவதற்கே முயற்சிக்கிறீர் போலும். ஆகவே, அவளுக்கேற்பட்ட மஹர் தொகையை கொடுத்துவிடும். பாரிஸ்டர் சாஹிப்! உம்மை சங்கடமுடையவராகப் பார்க்க யான் விரும்பவில்லை. நீரோ பிரக்யாதி பெற்ற ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர். நீதி ஸ்தலத்திலும் விவகாரத்திலும் உம் பணம் விரயமாய்விடும்; உமக்கு கெட்ட பெயரு மேற்பட்டுவிடும்; உமது தொழிலுக்கும் ஹானி ஏற்பட்டுவிடும். எனக்கு உம்முடைய நிலைமையும் நன்கு தெரியும். உம்மால் முழு மகரையும் செலுத்த முடியாதென்பதையும் நான் அறிவேன். இதற்காக 12,000 ரூபாய் அவளுக்குக் கொடுத்துவிடுமாறு உமக்கு யான் ஆலோசனை கூறுவதுடன் இந்த எனது ஆலோசனையை கட்டாயம் ஏற்றுக்கொள்வீரென்றும் கருதுகிறேன். இது உம்முடைய நிலைமையை யான் நன்கு தெரிந்து ஆலோசித்துக் கூறியதாகும்" எனத் தெரிவித்தார்.

ஜூபரோ எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். அந்தோனியா துற்செய்கையி லீடுபட்டதின் பயனாக தன் பாத்தியதைகளை இழந்துவிட்டிருக்கும் நிலைமையில் மஹர் கொடுக்கவேண்டிய சர்தர்ப்பம் எங்கிருந்து ஏற்படப் போகிறது என்று கதறினான். கலக்டரிடம் இவனுடைய வார்த்தைகள் யாதொரு பிரயோசனமுமளிப்பதாக இல்லை. முன்னமே ஜூபர்மீது மிதமிஞ்சிய கடன்பளு ஏறியிருக்கும் சந்தர்ப்பத்தில் பனிரண்டு ஆயிரம் ரூபாய் அவனுக்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறது. 2, 3 லேவாதேவிக்காரர்களிடம் இது சம்மந்தமாய்ப் பேசிப் பார்த்தான். அவர்கள் சற்றும் இடங்கொடுத்தார்களில்லை. ஒன்றும் செய்வதற்கு இயலாத நிலைமையில் நண்பர்கள் ஜூபரின் தந்தையிடம் விஷயத்தைத் தெரிவித்து குறிப்பிட்ட தொகை தேவை என்னும் கோரிக்கையை வெளியிட்டனர். ஜூபர் சம்மந்தமாய் நடைபெற்ற விஷயங்கள் முழுதும் ஷெய்கு சாஹிபுக்கு நன்கு தெரியாது. அவர் விர்த்தாப்பிய திசையை அடைந்து விட்டதால் வீட்டோடே யிருந்து கொண்டு தமது சகல காரியாதிகளையும் தம் சோதரரிடம் ஒப்புவித்திருந்ததால் வெளியில் நடைபெறும்

காரியாதிகளெதுவும் அவருக்கெட்டுவதில்லை. அதுபொழுது ஷேக்சாஹிப் புதிதாக பூறா விஷயங்களையும் செவியுற்றாகையால் அவரது இரு கண்களிலுமிருந்து நீர் தாரை தாரையாக வடிய ஆரம்பித்தது; முகத்தில் மஞ்சள்குறி காணப்பட்டது. அவருடைய திரேகத்திலிருந்து இரத்தம் உறிஞ்சப்பட்டது போலாய் விட்டது. ஷேக்சாஹிப் கோரியபடி ரூபாயைக் கொடுத்துவிட்டாராயினும் வெட்கத்தால் அவருக்கேற்பட்ட கவலையின் பயனாக மனம் ஒடிந்தவராகிவிட்டார். அந்தோனியா மகர் தொகையைப் பெற்றுக்கொண்டு என்று அவ்வூரை விட்டுப் புறப்பட்டாளோ அதே தினத்தில் ஷேக் சாஹிபுக்கு "சக்கறாத்" தோன்ற ஆரம்பித்தது. நமது ஷேக்சாஹிப் மரணமடையும் தருவாயில் ஜுபரை அருகாமையிலழைத்து ஜுபரே! என் இரத்தம் உன் கழுத்தின்மீதிருக்கிறது. யான் உமது தவறுகளை மன்னித்துவிடுகிறேன் எனக் கூறிய போது ஜுபர் அருமைத்தந்தையை கட்டி அணைத்துக்கொண்டு அழ ஆரம்பித்தான். அதோடு ஷேக் சாஹிப் இப் பொய்யுலக வாழ்க்கையை நீத்து மெய்யுலகை அடைந்தார்.

இந்திய சிறுபான்மையினர் கதி

சென்ற வருஷத்தில் ஜெர்மனி ஆஸ்டிரியா தேசத்தை விழுங்கியபோது ஜெக்கோஸ்லேவேக்கியாவிற்கும் அனர்த்தம்விளையுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே அவ்வனர்த்தம் வந்தது. ஜெக்கோஸ்லாவிக்கியாவின் பக்கம் நீதி இருக்கிறதா? ஜெர்மனியர் அநீதி செய்தார்களா? என்பதைப்பற்றி நாம் இதுபொழுது கவலை கொள்ளவில்லை. அவ்வாறு கவலைகொள்வதிலும் பிரயோஜனமில்லை. ஏனெனில், எல்லாம் நடைபெற்றுவிட்டது. இனிமேல் புதிதாக நடைபெறவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. மகா யுத்தத்திற்குப் பிறகுதான் நேசக் கக்ஷியினர் ஜெக்கோஸ்லாவிக்கியா, போலண்டு, யுகேஸ்லேவியா என்ற பெயர்களால் பல அரசாங்கங்களை ஸ்தாபித்தனர். ஜெர்மனி தலையெடுக்காமல் ஒடுங்கிவிடவேண்டும் என்பதுதான் இவ்விஸ்தாபனத்தின் நோக்கமாக இருந்தது. அக்கிரமம் அளவுக்கு மீறிவிடுங்கால், பயமோ பீதியோ இருப்பதில்லை. அக்கிரம் செய்யப்படுபவன் உயிரை விடுவதற்கும் துணிந்து; தனக்கு நேர்ந்துள்ள அநீதிக்குப் பழிவாங்கத் துணிந்துவிடுவான். இது உலகில் சகஜமாக நடைபெறுங் காரியம். இதற்கிணங்கவே, அநீதி இழைக்கப்பட்ட ஜெர்மனியர் சாகத் துணிந்தனர். ஒற்றுமையுணர்ச்சியுண்டாயிற்று. ஜெர்மனியர்கள் எல்லோரும் ஒன்று சேரத் தலைப்பட்டனர். இதன்பலனாக ரைன்லாண்டு, சார்பிரதேசம், ஆஸ்டிரியா ஆகியவைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஜெர்மனியுடன் சேர்ந்தன. ஜெக்கோஸ்லாவிக்யாவில் வாழும் ஜெர்மனியரும் ஜெர்மனியுடன் சேரவிரும்பினர். ஹெர் ஹிட்லரும் அவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பினார். பிரான்சு, பிரிட்டன், இத்தாலி இம் மூன்று அரசாங்கங்களும் இதற்குச் சம்மதித்தன. குண்டு போடாமல், யுத்தம் செய்யாமல் ஜக்கோஸ்லேவிக்கியா தன்னிடமிருந்த ஜெர்மன் பிரஜைகள் வாழும் பிரதேசங்களைக் காலிசெய்துவிட்டது.

இவ்வித நிலைமை ஜெக்கோஸ்லேவிக்கியாவிற்கு ஏற்பட்டதற்குக் காரணம், தனது அதிகாரத்தின் கீழிருந்த சிறுபான்மையினரான ஜெர்மனியரைக் கொடுமைப்படுத்தியதுதான். அவர்களைப் பட்சமுடன் சமமாக நடத்தியிருந்தால், அந்த தேசத்தை ஜெர்மனியர் தங்கள் தேசமாகக்கருதி இருப்பர். அதில் சிரத்தையுங் கொள்ளார்கள்.

இதே நிலைமைதான் இப்பொழுது இந்தியாவிலுமிருந்து வருகிறது. இந்தியாவிலுள்ள சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் கொடுமைப்படுத்தி வருகின்றனர். சிறுபான்மையினர் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினால், அதனைச் செவியேற்பவர் ஒருவருமிலர். இந்தியாவிலுள்ள சிறுபான்மையினருக்குப் பக்கபலமில்லை; அவர்கள் ஆதரவற்றவர்கள் என நினைக்கலாம். அநீதி ஒழிந்தேதீரும். அது ஒரு

போதும் நிலைக்காது. அதற்கு பக்க பலம் வேண்டுமென்பது அவசியமில்லை. அல்லாஹ் எக்காரியத்தையும் எந்நிலையிலும் செய்துமுடிக்க வல்லவன். அநீதி செய்வது அவனுக்குத் திருப்தியில்லை. நீதி செய்யப்பட்டவருக்கு எப்பொழுதும் அவன் உதவிசெய்துகொண்டே இருப்பான். அவ்வுதவி எப்பொழுது, எவ்விதம் வரும் என்பதை ஒருவரும் அறிந்து கொள்ள முடியாது. அது வந்த பிறகுதான் தெரியும்.

பிரிட்டிஷாரின் உதவி தங்களுக்கிருப்பதாகப் பெரும்பான்மையினர் கருதலாம். நம்பினவரைக் காப்பாற்றும் தன்மை பெரும்பான்மையினரிடம் எவ்வளவுக்கிருக்கிறதென்பதை ஜெக்கோஸ்லேவிக்கியா சம்பவத்திலிருந்து பெரும்பான்மையினர் உணரட்டும். வலுத்தவனுடனேயே பிரிட்டன் சேருவது வழக்கமாகையால், ஜெக்கோஸ்லேவிக்கியாவைக் கைவிட்டு ஜெர்மனியருக்கு உதவிபுரிந்தது. ஆகவே, இன்று சிதறிக்கிடக்கும் சிறுபான்மை வகுப்பினர் தங்களைச் சீர்திருத்திக்கொண்டு ஒன்று சேர்ந்து கிளம்பிவிட்டால், அப்புறம் சிறுபான்மையின் கட்சிதான் நியாயம் என பிரிட்டன் கூறும். அப்பொழுது, ஜெக்கின் பெரும்பான்மையினர் அழுதுகொண்டு நாட்டைக் காலி செய்வதுபோல், இந்தியப் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் கேட்கும் உரிமைகளை எல்லாம் தாராளமாகக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தநிலை வந்துவிடும். இந்தியாவிலுள்ள சிறுபான்மை வகுப்பார் மனம் கசந்து, வெறுப்படைந்து விட்ட பின்னர், பெரும்பான்மையின் உரிமைகளைக் கொடுக்க முன்வந்தால், அதனால் சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினருக்கும் மன ஒற்றுமை ஏற்படமுடியாது. மன ஒற்றுமை குன்றியபின் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தித் தங்களுடன் சேர்த்துக்கொள்ள முயலுவதைப் பார்க்கினும், இப்பொழுதே தாராள சிந்தையுடன் சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரித்து, வகுப்புத் தோரணையில் ராஜீயகக்ஷி ஏற்படாமலிருக்கிற நிலைமையைப் பெரும்பான்மையினர் உண்டுபண்ணாதிருப்பார்களாக.

கெய்ரோ மாகாநாடு

நெடுநாட்களாக பலஸ்தீன் அராபியருக்கும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குமிடையே மிகத் தீவிரமாய் நடைபெற்றுவரும் சச்சரவைக்குறித்து ஆலோசித்து, அப்பிரச்னை நியாயமுறைப்படி தீர்க்கப்படுவதற்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை வற்புறுத்துவதற்காக, 1938ஹு அக்டோபர் மாதம் 8-9ந் தேதிகளில், சர்வதேச முஸ்லிம் தலைவர்களின் மகாநாடொன்று கெய்ரோ (காஹிரா)வில் நடைபெற்றது. இஸ்லாமிய சரித்திரத்திலே இதோர் மகத்தான சம்பவமாகும்.

இது சர்வதேசத் தலைவர்கள் மகாநாடு ஆதலின், எகிப்து (மிஸ்ர்), பலஸ்தீன், ஸிரியா (ஷாம்), லிப்னான், இராக், யெமன், மொராக்கோ (முராகஷ்), அல்ஜீரியா, யுகோஸ்லேவியா, இந்தியா, ஹிஜாஸ்...........முதலிய அநேக தேசங்களிலிருந்து சுமார் 400 பிரதிநிதிகளுக்குமேல் விஜயஞ் செய்திருந்தனர். பொதுஜனங்கள் சார்பாக முக்கியப் பிரமுகர்களும் ஏராளமாய் வந்து கூடியிருந்தனர். மகாநாட்டுக்காக இடவசதிகளெல்லாம் பிரத்தியேகமாய் செய்யப்பட்டிருந்தன. எல்லா தேசத்து முஸ்லிம்களும் கூடியிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக விருந்தது.

இம் மகாநாட்டில் புரியப்படும் பிரசங்கங்களும், செய்யப்படும் தீர்மானங்களும் புரட்சியை உண்டாக்குவதற்குக் காரணமா யில்லாமல் மிதமாக யிருக்கவேண்டுமென்று, எகிப்திய சர்க்கார் முன்னாடியாக சிபாரிஷ் செய்திருந்தது. ஆனால், இம் மகாநாட்டை எகிப்து சர்க்கார் எதிர்க்கவில்லை. பலஸ்தீன் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் கண்டுபிடிக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்துவரும் பிரயத்தனங்களுக்கு எதிர்ப்புப் புரிய எகிப்து சர்க்கார் விரும்பவில்லை. பிரஜைகளுக்குள் சச்சரவு நேரிடாமல், அமைதி நிலவச் செய்யவேண்டியது சர்க்கார் கடமையாகயிருந்தமையால், தக்க போலீஸ் பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருந்தன.

தலைவர்கள் பிரசங்கம்

குறிப்பிட்ட நேரத்தில் பலஸ்தீன் பிரச்னைகளை கவனிக்கக்கூடிய கெய்ரோ மகாநாட்டின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. தலைவர்கள், பலஸ்தீன் விஷயமாய், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், யூதர்களுக்கு அநியாயமான சலுகையளித்து, அராபியர்களுக்கு அட்டூழியங்கள் விளைவித்து, பயங்கரமான அடக்குமுறைகளைக் கையாண்டு வருவதைக் கண்டித்து அரிய பெரிய கருத்துக்கள் அமைந்த பிரசங்கங்கள் புரிந்தனர்.

(குறிப்பு:—கெய்ரோ மகாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்களின் பெயர்கள், அவர்கள் புரிந்த பிரசங்கங்கள், நடவடிக்கைகள் ஆகியவையெல்லாம் விபரமாக ராய்ட்டர் தந்திச் செய்திகளில் அனுப்பப்படவில்லை. அரபிப் பத்திரிகைகள் மூலமாய்த்தான் அவைகளை நாம் தாமதித்து அறிய முடியும். அவ் வரபிப் பத்திரிகை செய்திகள் இந்தியாவுக்கு வந்துசேர குறைந்த பக்ஷம் ஒருமாதமாவது செல்லும். ஆதலின் அதுவரை நேயர்கள் பொறுத்துக் கொள்வார்களாக. ஆயினும், மகாநாட்டின் முக்கியாம்சமாகிய தீர்மானங்களின் சாராம்சங்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றினை நேயர்கள் படித்துணர்வார்களாக.)

நிறைவேறிய தீர்மானங்கள்:—

கெய்ரோவில் கூடிய அகில உலக முஸ்லிம் பிரதிநிதிகள் மகாநாட்டில், பலஸ்தீன் பிரச்னை விஷயமாக், ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

1. அராபியரை நசுக்கி யூதர்களுக்கு சலுகை யளிக்கும் பால்போர் அறிக்கை மிக அநீதமான தென்றும், உபயோகமற்ற தென்றும் கருதி இம் மகாநாடு அதனை நிராகரித்துத் தள்ளுகிறது.

2. பலஸ்தீனில் யூதர்களுக்குச் சொந்த நாட்டை ஏற்படுத்தித் தரும் பிரிட்டிஷாரின் நடத்தையை இம் மகாநாடு கண்டிப்பதுடன், அதற்கு வழிகோலியுள்ள பால்போர் அறிக்கையை இம் மகாநாடு கண்டிக்கிறது.

3. பலஸ்தீனில் இனிமேல் யூதர்கள் குடியேறுவதை உடனே நிறுத்திவிடவேண்டுமென்று இம் மகாநாடு கவர்ன்மெண்டை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4. பலஸ்தீனை யூதர் நாடென்றும் அராபியர் நாடென்றும் பிரிக்கவேகூடாதென்று இம் மகாநாடு கேட்டுக்கொள்வதுடன், அது சம்பந்தமாய் பிரிட்டிஷார் செய்த தீர்மானத்தை நிராகரிக்கிறது.

5. பலஸ்தீனில் பொறுப்பாட்சியை ஏற்படுத்தி பெரும்பான்மை வகுப்பினரான அராபியருக்கு நியாயப்படியுள்ள அதிகாரங்களை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறது. இதற்கனுசரணையாக ஆங்கிலோ அராபிய ஒப்பந்தமேற்பட வேண்டுமென்றும் கோருகிறது.

6. கிளர்ச்சி சம்பந்தமாய் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்துவிட்டு, அவர்களுக்கெல்லாம் பொதுவான மன்னிப்பு அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

7. பலஸ்தீன் பிரச்னையை பிரிட்டிஷார் நேர்மையாய் தீர்க்க விரும்பினால், இம் மகாநாடு சிபாரிஷ் செய்யும் மேற்படி கோரிக்கைகளை ஒத்துக்கொள்வதே சரியானவழி யென்று இம் மகாநாடு வற்புறுத்துகிறது.

8. மேற்படி கோரிக்கைகளுக்கு பிரிட்டிஷார் இணங்காவிடில், பிரிட்டிஷாரையும் யூதர்களையும் விரோதிகளாகவே கருதவேண்டுமென்று எல்லா அராபியர்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

9. மேற்கண்ட தீர்மானங்களை யெல்லாம் மனமொப்பி ஆதரிக்கவேண்டுமென்று எல்லா அராபியதேச சர்க்கார்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

10. நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானங்களை கவனித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரச்செய்யும் கடமையை கவனிக்க கெய்ரோவில் ஒரு நிரந்தரக் கமிஷனை ஏற்படுத்தும்படி இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

11. தன்னுடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காக வேண்டி பலஸ்தீனில் ஏற்கெனவே யூதர்கள் என்னென்ன பிரஜா உரிமைகளை யெல்லாம் அனுபவித்து வந்தார்களோ அவைகளை இனியும் அநுபவித்துக் கொள்ளலாமென இம் மகாநாடு ஒத்துக்கொள்கிறது.

பிரிட்டனின் பணிவு

கெய்ரோ மகாநாட்டுக்குப் பின், பிரிட்டிஷ் மனப்பான்மையும் பலஸ்தீன் நிலைமையும் வெகு தூரம் மாறுபட்டுள்ளன. பலஸ்தீனை பிரிவினை செய்வதென்ற விபரீத எண்ணத்தை பிரிட்டிஷ் கைவிட்டுவிட்டது. யூதரை பலஸ்தீனில் மெஜா

ரிட்டியாக்குவதென்ற தீய கருத்தையும் கை விட்டு விட்டது. பலஸ்தீனில் ராணுவ ஆர்ப்பாட்டம் அடக்குமுறைகளெல்லாம் தளர்த்தப்பட்டு விட்டன. அரசியல் கைதிகள் விடுதலை விஷயமும் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

இதையெல்லாம் கவனிக்கையில், அகில உலக முஸ்லிம்களின் தீர்மானங்களுக்கு ஒரு சக்தி இருக்கிறதென்றே தெரிகிறது. எல்லாம் வல்ல இறைவன் அராபிய முஸ்லிம்களுக்கு வெற்றியை அருள்வானாக ஆமீன்.

பைத்துல் முகத்தஸில் நடைபெறுவதென்ன?

"பரிசுத்த புண்யஸ்தலமான பலஸ்தீன் பிரதேசத்தில் சில நாட்களாக நிகழ்வுற்று வரும் அட்டூழியங்களின் காரணமாய், அதன் அழகிய நகரங்கள் பாழ்ப்பட்டுப்போய்விட்டன. ஊர்கள், சிற்றூர்கள் முதலியவற்றின் நிலைமையோ நகரத்து ஸ்திதியைவிட மகா சீர்கேடாகிவிட்டன. ஜாபா, அக்ரா, தூல்காராம், ரம்லா முதலிய நகரங்களின் பசுமையான காட்சிகளெல்லாம் சின்னா பின்னப்பட்டு அழிந்து விட்டன. இங்கு வசித்த மக்களெல்லோரும், மிகமிக க்ஷீண ஸ்திதியடைந்து வறுமையில் உழல்கின்றனர். எந்நேரமும் ஜனப் பழக்கமும், நாணயச் செல்வாக்கும், கொள்வினை—கொடுப்பினையும் மிகுந்திருந்த கடைகளெல்லாம் காலியாகிவிட்டன. அந்தக் காலிக் கடைகளின் கதவுகளில் "வாடகைக்கு விடப்படும்" என்ற போர்டுகள் தொங்க விடப்பட்டிருக்கின்றன. தெருக்களிலும், சிறு சிறு வீதிகளிலுமுள்ள 'கஹ்வா' (டீ) கடைகளில் எந்நேரமும் வாலிப மக்களின் கூட்டமும் கோஷமும் இருந்து கொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட இடங்களின் வாலிபர்கள், பட்டினியும், பசியுமாய் அலைந்து கொண்டிருக்கின்றனர். என்னைக்கண்டதும் அநேக வாலிபர்கள் என்னை யணுகி, 'கனவானே! எங்களுக்கு ஏதாவது சம்பளத்துக்கு வேலை கொடுங்கள்' என்று வேண்டிக்கொண்டனர்" அந்தோ!

மேற்கண்ட வரலாறுகள், பிரபல அங்கிலேய கனவானொருவர், பலஸ்தீனின் நிலைமையை நேரில் கண்ணாரக்கண்டு, மனம் இளகி, எடுத்துரைத்த சாக்ஷியமாகும். அக் கனவான் இன்னமும் விபரமாய் பலஸ்தீன் நிலைமையைக் கூறியிருக்கிறார். எனினும், ஈண்டு அவற்றின் முக்கிய பகுதியை கூறியுள்ளோம். இந்த ஒரு சிறு சாக்ஷியத்தைக்கொண்டே, பரிசுத்த புண்யஸ்தலமான பைத்துல் முகத்தஸ் எத்துணை சீரழிந்து போய்விட்டதென்பதையும், அராபியர் என்னென்ன விதமான துன்பங்களை அனுபவித்து வருகின்றனரென்பதையும், பிரிட்டிஷாரின் அட்டூழியம் எம்மட்டும் அளவு கடந்துவிட்டதென்பதையும் உள்ளாவுள்ளபடி உணர்ந்து கொள்ளலாம். இதையெல்லாம் மனத்திலிருத்தி எண்ணுமிடத்து, உள்ளம் துணுக்குற்றுவிடுமென்பதில் ஐயமில்லை. இத்துணை அட்டூழியங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணமென்னை? இதற்கெல்லாம் யார் பொறுப்பு என்பதை ஈண்டு சிறிது விளக்குவாம்.

அராபியர் கோரிக்கை

அராபியர்மீது சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றனவே, அதற்கு அவர்கள் இழைத்த குற்றம்தானென்ன? அராபியர்கள், தங்கள் தேசத்தில் அன்னியர்கள் ஏராளமாய் வந்து குடியேறி தங்கள் சொத்து சுதந்திரங்களை அபகரித்துக்கொள்ளக் கூடாதென்று வேண்டுகிறார்கள். சென்ற 20 வருடகாலமாக 4 லக்ஷம் யூதர்கள் அன்னிய நாடுகளிலிருந்து வந்து பலஸ்தீனில் குடியேறியிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் இப்போதே வெளியேற்றித் துரத்திவிட வேண்டுமென்றும், அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் பிடுங்கி தங்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் அராபியர்கள் கோரவில்லை. ஆனால் அதற்குப் பதிலாய் மிகுந்த தாராள நோக்கத்துடன், "ஏற்கெனவே குடியேறியுள்ள யூதர்கள் இங்கேயே இருந்துபோகட்டும்; இனிமேல் புதிய யூதர்கள் குடியேறுவதை தடைசெய்துவிட வேண்டும்; பலஸ்தீனுக்கு பிரிட்டிஷாரின் வாக்குறுதிகளின் பிரகாரம் பூரண சுயாட்சியை அளிக்க வேண்டும்; பலஸ்தீனை பல துண்டுகளாகப்

பிரித்து விடுவதென்ற யோசனையை உடனே வாப்பஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்.'' இவை தான் அராபியர்களின் நியாயமான கோரிக்கை.

மேற்படி கோரிக்கை பகுத்தறிவுக்கும் நியாயத்துக்கும் மிகமிகப் பொருந்தியதென்பது சாதாரண அறிவுடையோருக்கும் தெரியவரும். அங்ஙனமிருக்க, பிரிட்டிஷார், அராபியர்களின் அபிலாஷையை உதாசினஞ் செய்துவிட்டு, அன்னிய யூத வர்க்கத்தாரை திருப்திப் படுத்துவதற்காக,' அராபியர்களை அடக்கி அட்டூழியங்கள் இழைத்து வருகின்றனர்.

பிரிட்டிஷின் பண ஆசை

யூதர்கள் பணக்காரர்கள்; அவர்களுடைய பொக்கிஷத்தின்மீது பிரிட்டிஷாருக்கு கண்ணோட்டமிருந்து வருகின்றன. அராபியர்கள் ஏழைகள். ஆகவேதான், ஏழைகளை நசுக்கி, ஏழைகளின் ஊரைப் பிடுங்கி பணக்காரருக்கு கொடுத்து பிரிட்டிஷார் பணம் பறிக்கப் பிரயத்தப்பட்டு வருகின்றனர். பணத்தாசையால் பிரிட்டிஷாரின் அறிவு மங்கிவிட்டது. ஆகையால் தான் அராபியரின் கூக்குரலும், உலக முஸ்லிம்களின் சிபாரிசும் பிரிட்டிஷாரின் காதில் புகவில்லை. நியாயப்படியும் தர்மப்படியும் நிறைவேற்றிக்கொள்ள தகுதியில்லாத காரியங்களை பிரிட்டிஷார், ராணுவ பலத்தைக் கொண்டும், பீரங்கிகளைக் கொண்டும், வெடிகுண்டுகளைக் கொண்டும் நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கின்றனர்.

அங்கு நடிப்பதென்ன?

பலஸ்தீனில் தற்காலம் நடைபெறும் அட்டூழியங்களைப்பற்றிய செய்திகள் பிரிட்டிஷ் செல்வாக்கு படைத்த 'ராய்ட்டர்' தந்திச் செய்தி ஸ்தாபனத்தாரின் தயவினால்தான் உலக முஸ்லிம்களுக்குத் தெரிய வருகின்றன. ராய்ட்டர் ஸ்தாபனத்தார், பிரிட்டிஷை ஆதரிப்பதால் மெய்யான செய்திகள் நம் வரைக்கும் வந்து எட்டுவதில்லை. ஆதலின் பலஸ்தீனில் என்னதான் நடைபெறுகிறதென்பதை நம் இந்திய முஸ்லிம்கள் உள்ளாளுள்ளபடி உணர்ந்து கொள்ள முடியாமலிருக்கிறது. பிரிட்டிஷார் தணிக்கை செய்து அனுமதிக்கும் செய்திகள்மட்டும் தான் ராய்ட்டர் மூலம் பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

இதுகாலை பலஸ்தீனில், ராணுவ ஆட்சியும், பீரங்கி, வெடிகுண்டு, துப்பாக்கிகளின் ஆர்ப்பாட்டமும்தான் இருந்து வருகிறதென்பதில் ஐயமில்லை. இந்தியாவிலிருந்தும் ஏராளமான சோல்ஜர்கள் பலஸ்தீனுக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கின்றனர். இதையெல்லாம் நோக்குமிடத்து பலஸ்தீனில் என்னதான் நடக்கிறதென்பதை சரிவர அறிந்து கொள்ள முடியவில்லை.

பிரிட்டிஷ் எண்ணம் நிறைவேறுமா?

"பிரிட்டிஷார் தற்போது கைக்கொண்டுள்ள அட்டூழிய முறைகளால் அவர்கள் தங்கள் எண்ணங்களில் வெற்றி பெற முடியுமா?" இந்த வினாவுக்கு விடை நாம் கூற வேண்டிய அவசியமில்லை. பலஸ்தீனிலுள்ள அராபிய மக்கள் தங்கள் இரத்தத்தை சிந்தியும், தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தும் பதிலளித்து வருகின்றார்கள். பலஸ்தீனின் ஒவ்வொரு பகுதியும் அரபியர் இரத்தம் சிந்தி, இரத்தக்கறை பட்டுப் போய்விட்டது. அந்த கறை இலேசில் மறைந்து விடமாட்டாது.

பலஸ்தீன் அராபியர்களுக்கு எல்லா அராபியநாடுகளுடையவும், பொதுவாய் எல்லா இஸ்லாமிய உலகத்துடையவும் ஆதரவும் அநுதாபமும் பரிபூரணமாயிருந்து வருகின்றது. எனவே, பலஸ்தீன் அராபியருக்கு நியாயம் வழங்கப்படாவிடின், எல்லா இஸ்லாமிய உலகத்தின் கோபாவேசமும், எதிர்ப்பும் கிளம்புமென்பதில் சந்தேகமில்லை. எல்லா உலகத்து முஸ்லிம்களுடைய விரோதத்தையும் தன்மேல் போட்டுக்கொண்டு பிரிட்டிஷார் கவலையற்றுவாளாயிருந்துவிடுவது முடியாது.

20-வருட தியாகம்

பலஸ்தீனுக்காக அராபியமக்கள் சென்ற 20-வருடகாலமாக ஓயாமல் தியாகங்கள் புரிந்து வந்துள்ளார்கள். தங்கள் பொன்னுனை தாய்நாடு அன்னியர் கைக்குள் போய்விடக்கூடாதென்பதற்காக அராபியர்கள், தங்களாலான எல்லா வித தியாகங்களையும் செய்து வந்துள்ளார்கள். அராபியர்களின் கிளர்ச்சியையும் தீவிரச்செயல்களையும் அடக்கி ஒடுக்கி விடுவதற்காக சென்ற 20 வருடகாலமாக, பிரிட்டிஷார், என்னென்ன விதமாய் அடக்குமுறைகளையெல்லாம் கையாள முடியுமோ அவைகளையெல்லாம் கையாண்டுப் பார்த்து விட்டார்கள். அராபியர்கள், பற்பல விதமான துன்பங்களையும், அடக்கு முறைகளையும் மனப்பூர்வமாய் சகித்துக்கொண்டார்களே

யல்லாமல், அவைகளுக்குச் சிறிதும் சிரஞ் சாய்க்க வில்லை. அராபியர்கள் தங்கள் உயிரை விடவும் சொத்துக்களை விடவும், தங்கள் தாய் நாட்டின் மானத்தை, சுதந்தரத்தையே பெரிதென மதிக்கிறார்கள்.

பலஸ்தீன் யுத்தம்?

பலஸ்தீனில் அராபியர்கள் "கலகம்" செய்து வருகிறார்களென்றும், அதை பிரிட்டிஷார் "அடக்குமுறை" யால் அடக்கி வருகிறார்களென்றும் மட்டும் தான் நாம் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்து வருகின்றோம். ஆனால், வாஸ்தவத்தில் பலஸ்தீனில் நடைபெறுவதும் சாதாரணகலகமும் எதிர்ப்புமல்ல; உண்மை அதோர் பேரிய யுத்தமேயாகும். இதிலொன்றும் ஐயமில்லை. அதை யுத்தம் என்று சொல்ல பிரிட்டிஷ் வெட்கப்படுகிறது. யுத்தத்தில் என்னென்ன சாதனங்களையும் சாமான்களையும் உபயோகிப்பார்களோ அவைகளையெல்லாம் பிரிட்டிஷார், ராணுவங்களின் மூலம் உபயோகித்து வருகின்றார்கள். நன்கு பயிற்சி பெற்ற இராணுவங்கள், ஏராளமாய் பலஸ்தீனில் இருந்து அராபியருடன் எதிர்த்துப் போராடி வருகின்றன.

15,000 அராபியர் படை.

பலஸ்தீனில் அராபியர் பிரிட்டிஷ் சேனைக்கு சமத்துவ பலமும் சாதனமுமுடையவர்களாகவே இருந்து வருகின்றார்கள். போதிய யுத்தப் பயிற்சியும், துப்பாக்கி சாதனங்களும் உடைய 15,000 அராபிய இளவாலிப வீரர்கள், யுத்தத்தில் தீவிரமாய் ஈடுபட்டிருக்கிறார்கள். யூதர்கள் வருகை இந்நாட்டில் பூரணமாய் தடை செய்யப்பட்டாலல்லாது, அவ்வாலிபப் படைகள் தூக்கங்கொள்ள மாட்டார்கள். தங்களுடைய நிலங்களும் சொத்துக்களும் யூதர்களுடைய கைக்குப்போகாமல் பார்த்துக்கொள்ளவும் பலஸ்தீன் துண்டு துண்டாக ஆக்கப்படாமலிருக்கவும், தங்களாலான எல்லாவித தியாகங்களும் புரிய அவ்விள வாலிபர்கள் யுத்த சன்னத்தர்களாய் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள்.

ஒரே வழி

பல மாதங்கள், ஏராளமான பட்டாளங்களைக் கொண்டும் சாதனங்களைக் கொண்டும் பிரிட்டிஷார், அராபியர்களை அடக்கி நசுக்கி விடலாமென்று பார்த்தும் ஒன்றும் முடியவில்லை. நஷ்டத்தின்மேல் நஷ்டமே பிரிட்டிஷாருக்கு ஏற்பட்டு வருகின்றது. ஆகவே, இனி என்ன உபாயத்தை கையாண்டு அராபியரை அமைதியுறச் செய்யலாமென்று பிரிட்டிஷார் யோசித்து வருகின்றனர். இனி பலஸ்தீன் அராபியர்களை நல்லவர்களாக்க ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அதாவது:—ஸிரியா (ஷாம்), இராக் நாடுகளுக்கு சுயாட்சி அளிக்கப்பட்டிருப்பதேபோல் பலஸ்தீனுக்கும் சுயாட்சி அளித்து விடுவதுதான் அந்த சரியான வழி. அப்படிச் செய்து விட்டால், இராக், ஸிரியாவைப்போல், பலஸ்தீனும் பிரிட்டிஷாருக்கு ஸ்நேகமாகவே நடந்துகொள்ளும்; மற்ற சர்வதேசச் சிக்கல்களிலும் பிரிட்டிஷுக்கு அராபியர்களால் சகாயங்கள் கிடைக்கும்.

சென்ற சில நாட்களுக்குமுன், ஜினீவாவில் நடைபெற்ற ஆலோசனைக் கமிட்டி மகாநாட்டில், இராக் தேசத்து அன்னியநாட்டு மந்திரி செய்யித் தவ்பீக் ஸுவைதி அவர்கள், எல்லாப் பிரதிநிதிகளின்முன், மேற்படி ஒரே வழியைத்தான் பகிரங்கமாய் எடுத்துரைத்தார்.

எகிப்தின் பிரதிநிதியான யஹ்யா பாஷாவும், இராக் மந்திரியின் யோசனையை ஆதரித்துப் பேசி, பிரிட்டிஷுக்கு ஹிதோபதேசம் செய்தார். மேற்படி மகாநாட்டில் இறுதியாய் முடிவுரை பேசிய மிஸ்டர் பட்லரும், "பிரிட்டிஷ் பலஸ்தீனை பிரிவினை செய்துவிட விரும்புவது அத்துணை சிறந்த காரியமல்ல; எதுவரையில் கமிஷனின் ரிப்போர்ட்டு இன்னதென அறியப்படமாட்டாதோ அதுவரை, பிரிட்டிஷ் தன்னுடைய திட்டத்தை முடிவு செய்து விடக்கூடாது" என்று கூறி விட்டார். எனவே, பிரிட்டிஷார், பலஸ்தீன் பிரவினையைக் கைக்கொள்வது தனக்குத்தானே ஆபத்தைத் தேடிக்கொள்வதாகுமென்று, எச்சரிக்கப்பட்டுளது. இராக், ஷாம், எகிப்து நாடுகளின் ஆலோசனையை அலட்சியம் செய்ய பிரிட்டிஷ் தைரியம் கொள்ளாது.

பலஸ்தீனும் இந்தியாவும்

அளவற்ற நஷ்டங்களுக்கும், பொல்லாத விரோதங்களுக்கும் ஆளாகியும் பிரிட்டிஷார், பலஸ்தீனில் தங்கள் செல்வாக்கை விட்டுக் கொடாமலிருப்பது எல்லோருக்கும் பெருத்த ஆச்சரியமாயிருக்கலாம். இங்ஙனம், பிரிட்டிஷ் பிடிவாதமாயிருப்பதில் ஒரு ரகசியமிருக்கிறது. அதாவது:—

ரோமாபுரிக்கடலிலும், செங்கடலிலும், பொதுவாய் ஆசியா கண்டத்திலும், ஆப்ரிக்காவிலும், பிரிட்டிஷாருக்கு பலமான செல்வாக்கும் ஆதிக்கமும் இருந்து வருகிறது. இந்த செல்வாக்குகளுக்கெல்லாம் பலஸ்தீனம் ஒரு உறைவிடமாகவும் முக்கிய ஸ்தலமாகவும் அமைந்திருக்கிறது. பூகோளப் படத்தை எடுத்துப் பார்ப்போமானால், இங்கிலாந்திலிருந்து இந்துஸ்தானத்துக்கு கப்பல் மூலமும் ஆகாய விமானம் மூலமும் வெகு துரிதத்தில் வருவதற்கு ஒரு குறுக்குப்பாதை காணப்படுகிறது. அந்தப்பாதைக்கு மத்தியஸ்தலம் (தங்குமிடம்) பலஸ்தீனேயாகும். பலஸ்தீனம்தான் இந்தியாவை இங்கிலாந்துடன் இணைத்து வைக்கிறது. இதன்மூலம் இந்தியாவையும், கீழ்நாடுகளையும் சுரண்டுவதற்கு, பிரிட்டிஷாருக்கு அபரிமிதமான சவுகரியங்கள் இருக்கின்றன.

இத்தியாதி அனுகூலங்களை முன்னிட்டுத்தான், பிரிட்டிஷார் பலஸ்தீனில் தங்களுக்குள்ள செல்வாக்கை விட்டுக்கொடுக்க மனமில்லாமல், பலஸ்தீனிலுள்ள 10-லக்ஷம் அராபியருடன் போராடி வருகின்றனர்.

இந்திய முஸ்லிம்கள் கவனிக்க!

பலஸ்தீனுக்கு இதுகாலை ஏற்பட்டுள்ள ஆபத்து பலஸ்தீனத்தோடு தீர்ந்து விடுமென்று இந்தியர்கள் எண்ண வேண்டாம். பலஸ்தீனில் பிரிட்டிஷாரின் சுயேச்சாதிகாரம் ஏற்பட்டு விடுமானால், அதன் பலாபலன் குறிப்பாய் இந்தியாவையும், பொதுவாய் இஸ்லாமிய நாடுகளையும் வந்து பாதிக்கும். அதன்பின் இந்தியா, இஸ்லாமிய நாடுகள், பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் சுகவாழ்வும், செழிப்பும், செல்வாக்கும் சீரழிந்து சின்னபின்னப்பட்டுப்போகும். வர்த்தகமெல்லாம் பிரிட்டிஷாரின் கையில்போய், உள்நாட்டுப் பொருளாதாரம் சீரழிந்துபோகும். இதையெல்லாம் நம் இந்திய முஸ்லிம்கள் உணர்ந்து, பலஸ்தீன் அராபியர் விஷயத்தில் அநுதாபங் கொள்வார்களாக.

(மதீனா)

தா. இ. ஹாபிஜின் கபட சூக்ஷி

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் விபரம்

(மௌலானா அபுல்ஹஸன் சாஹிப் மத்ராஸி வரைவது.)

மகுடத்தில் கண்ட ஹாபிஸ் என்பார் பினங்தேச நேசனில் எழுதியிருந்த கட்டுரையைப்பற்றி இதற்கு முந்திய இதழில் ஓர் வியாசம் வரைந்துள்ளேன். அஃது நேயர்களது ஞாபகத்திலிருக்கலாம். அதனை இன்னும் சற்று விளக்கவேண்டி யிருக்கிறது. அவர் ஷை தேச நேசனில் எழுதியுள்ள கட்டுரையின் முக்கியாம்சத்தை அப்படியே தருவதால் மீண்டும் ஒருமுறை நண்பர்கள் படித்து ஞாபகப்படுத்திக் கொள்வார்களாக.

ஹாபிஜின் கட்டுரை வருமாறு:—

"கண்ணியமிக்கமுஸ்லிம் சகோதரர்காள்! நன்றாய் ஆலோசனை செய்து பாருங்கள். எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் காலத்திற்குப்பின் எத்தனையோ மதப்பிரிவுகள் உண்டாயிருக்கின்றன.

நமது நபிகள் திலகம் அவர்களும் இஸ்லாத்தில் 72-பிரிவுகள் ஏற்படும், அதில் ஒரு வகுப்பாரே என்னை கடைபிடிக்கும் உண்மை முஸ்லிம்கள் எனக் கூறிப்போந்தார்கள். அவ்வாக்கியத்தையே சதா தங்களுக்கு சாதகமாக வைத்து ஷியா—சுன்னி, அஹ்லஹதீது, வஹ்ஹாபி, அஹ்மதி இன்னும் இவைபோன்ற பற்பல பிரிவாரும் விவாதிக்கின்றனர். ஆகவே, 1400 ஆண்டுகளாகியும் இதில் யார் சரியான முஸ்லிம்கள் என்பதை இவ் வுலகம் கண்டுகொள்ள முடியவில்லை. (இவர்களுக்கிடையே சில்லரையான விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் பல விருப்பினும் இவர்களெல்லாம் முஸ்லிம்களாகவே யிருக்கின்றனர் என்பதை நண்பர் உணரவேண்டும். ஹாபிஸ் பாக்கவி.)"

இக் கட்டுரையின் விருத்தாந்தங்களைப் பற்றி பல விஷயங்கள் முந்திய இதழில் விபரித்துள்ளேம். இதுபொழ்து ஹதீதில் குறிப்பிட்டுள்ள 73 கூட்டத்தார்களையும் அவர்களின் கொள்கைகள் முதலிய விபரங்களுடன் சுருக்கமாய்வரைகின்றேன். ஊன்றிப்படிப்பீர்களாயின் ஹாபிஜின் கூற்று சன்மார்க்கத்திற்கு முற்றும் விரோதமானதென்பது விளங்கா நிற்கும். ஓர் விஷயத்தை ஆரம்பத்திலேயே எழுதிவிட நினைக்கின்றேன். அதாவது, பிரஸ்தாபக் கட்டுரையில் "1400-ஆண்டுகளாகியும் இதில் யார் சரியான முஸ்லிம்கள் என்பதை இவ் வுலகம் கண்டுகொள்ள முடியவில்லை" என ஹாபிஸ் வரைகின்றார். என்னே இவரின் எழுத்து சென்ற வாறு! இம்மாதிரியான கூற்றுக்களை அஞ்ஞானிகள், வழிகெட்ட மதத்தினர் தங்களைக்குறித்து கூறிவருகின்றனர். முஸ்லிம்களில் அநேகர் நபி பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றிய காரணத்தால் ஆத்மார்த்த முன்னேற்றத்தில் அளவுகடந்த மேன் பதவிகளையடைந்தனர். அயல் மதவாதிகளும் இந்த இரகஸியத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இன்னிலையில் உண்மை முஸ்லிம்கள் யார் என்பதை இவ்வுலகம் இன்னும் கண்டு கொள்ள முடியவில்லை என வரைவது அறிவீனமேயன்றி வேறென்ன?

இனி ஹதீதில் வந்திருக்கும் கூட்டப் பிரிவினைகளைப்பற்றி விளக்குவாம். "எனக்குப் பின் எனது உம்மத்துகள் எழுபத்து மூன்று கூட்டத்தினராகப் பிரிந்து விடுவார்கள்; அவர்களில் ஒரு கூட்டத்தார் மட்டிலும் சுவர்க்க வாதிகள், மற்றவர்கள் நரக வாதிகள்" என்று நபிகள் திலகம் (ஸல்.) கூறினார்கள்.

அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே சொர்க்க வாதிகள் யாவர்?" என்பதாக விசாரிக்கப்பட்டது. அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "நானும் எனது அஸ்ஹாபுகளும் எதன்மீதிருக்கிறோமோ அதன்படி நடந்தவர்கள்" என்பதாக பதிற் கூறினார்கள் என்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. எனவே, இந்த ஹதீதில் சொல்லப்பட்டுள்ள விஷயத்தை கவனிக்குமிடத்து, அஹ்ல சுன்னத்து வல்ஜமா அத்துகளைத் தவிர வேறெந்த கூட்டத்தினரும், நாயகம் (ஸல்.) அவர்களும் அவர்களது அஸ்ஹாபிகளான தோழர்களும் நடந்த வழியில் இல்லையென்பது நிச்சயம். எனவே, சுவர்க்க வாதிகளென்று முன்னறிக்கை செய்யப்பட்ட ஒரு கூட்டத்தினர் அகில சுன்னத்து வல்ஜமா அத்தார்களே யாவர். அவர்கள்தான் நபிபெருமானார் அவர்களுடையவும் சஹாபாக்களுடையவும் சொற்செயல்களை ஏகதேசத்தில் பின்பற்றி நடக்கக் கூடியவர்கள்.

மேலும் மற்றொரு ஹதீதில் "பெரும்பாலான கூட்டத்தினரைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்" என, நபிகள் திலகம் அருள் செய்திருக்கின்றார்கள். இதை அனுசரித்து அகில சுன்னத்கள் சஹாபாக்களில் அபிப்பிராய பேதப்பட்ட விஷயங்களில் பெரும்பாலாருடைய போக்கைப் பின்பற்றி நடப்பார்கள். இவர்கள் ஹனபி, ஷாபிஈ, மாலிகி, ஹம்பலி மத்ஹபுகளைச் சேர்ந்தவர்களாவார்கள். இந் நான்கு மத்ஹபுகளுக்கிடையில் சிற்சில வித்தியாசங்கள் காணப்படினும் முக்கியமான விஷயங்களில் இந் நான்கு மத்ஹபுக்காரர்களும் ஒற்றுமையுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே, இவர்கள் ஏகதேசத்தில் சுன்னத் ஜமா அத்தார்கள் என கணக்கிடப்பட்டு வருகின்றனர். இந்நான்கு மத்ஹபுகளின் இமாம்கள் சரியான காரண காரணங்களைக் கொண்டு தங்கள் மத்ஹபுகளுக்கு ஓர் "உஸூல்" என்னும் சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். நபி பெருமானாரவர்களும் உம்மத்துகளின் சவுகரியத்தை உத்தேசித்து ஒரு விஷயத்தை பற்பல விதமாகவும் அனுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்கள். இது காரணத்தாலும் இமாம்களுக்கிடையில் அனுஷ்டான வித்தியாச மேற்படுகிறது. எனவே, அனுஷ்டான விஷயங்களில் சிற்சில வித்தியாசங்கள் காணப்படினும், மூலக் கொள்கைகளில் எல்லாரும் ஒன்றுபட்டே இருக்கின்றனர். ஒருவரை யொருவர் பின்பற்றி தொழுவதும் ஆகுமென்பது இவர்களின் கொள்கை. எனவே, இவர்களை ஒரே ஜமாஅத்தாக கணக்கிடுவதில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. இவர்களைக் குறித்துதான் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் சுவர்க்க வாதிகளென அருள் செய்திருக்கின்றார்கள்.

மற்ற 72 கூட்டத்தினர்களும் மூலக் கொள்கைகளிலேயே வித்தியாசப்பட்டவர்கள். ஹதீதில் நரக வாதிகளினது கூட்டத்தின் எண்ணிக்கை 72 ஆக இருக்கும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. என்றாலும், அவர்களின் கொள்கைகள் யாதாயிருக்கும்; அவர்கள் யாவர் என்னும் விபரம் கூறப்படவில்லை. என்றாலும், அனுஷ்டானத்தில் இந்த 72 கூட்டத்தினரின்

விபரத்தை இமாம்கள் விபரித்துள்ளனர். நபி பெருமானார் (ஸல்.) அவர்களுக்குப் பின் ஒரு பெரும் கூட்டம் நாயகம் அவர்களைப் பின்பற்றிக்கொண்டே இருந்து வருகிறது. மற்றும் பல கூட்டத்தினர் இம்மாபெரும் ஜமா அத்திலிருந்து ராஜீய தேசீய கட்சிகளாகப் பிரிந்தார்கள். அவர்கள் அத்துடன் நின்று விடாது மார்க்க விஷயத்திலும் தலையிட்டு தங்கள் தங்களுக்கு தனித்தனியே மார்க்க கொள்கைகளையும் ஸ்தாபித்துக் கொண்டனர். அக்கொள்கைகள் உஸூலே இஸ்லாம் என்னும் மூலக் கொள்கைக்கே விகர்ப்பமானதாக இருந்து வருகின்றன. இதனால் தான் அக்கூட்டத்தினர் நரகவாதிகள் என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அருள் செய்திருக்கின்றார்கள்.

72 கூட்டங்கள்

அந்த எழுபத்தி ரண்டு கூட்டத்தினரின் விபரமாவது:—அவர்களில் ஆறு கூட்டம் பிரதமக் கூட்டமாகும். இதில் ஒவ்வொரு கூட்டத்தினரும் 12 உட்பிரிவாகப் பிரிகின்றனர். ஆகவே 72 கூட்டம் பூர்த்தியாகி விடுகிறது. அந்த ஆறு கூட்டங்களின் விபரம். 1 ராபிளிய்யா, 2 காரிஜிய்யா, 3 ஜபரிய்யா, 4 கத்ரிய்யா, 5 ஜஹ்மிய்யா, 6 மாஜிய்யா வாகும்.

1. ராபளிய்யா

ராபளிய்யா கூட்டத்தினுள் பிரிந்த பன்னிரண்டு வகை கூட்டத்தினர் வருமாறு:—

1. அலவிய்யா, 2. பித்இய்யா, 3. ஷீஇய்யா, 4. இஸ்ஹாகிய்யா, 5. ஜைதிய்யா, 6. அப்பாஸிய்யா, 7. இமாமிய்யா, 8. நாஉஸிய்யா, 9. தனாஸகிய்யா, 10. லாஇய்யா, 11. ராஜிய்யா, 12. முர்த்தளிய்யா. தருவீஹ் தொழுகை சுன்னத்தல்லவென்பதும், தொழுகையை இமாம் ஜமாஅத்தாகத்தொழுக வேண்டியதில்லையென்பதும், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.), உமர் பாரூக் (றலி.), உதுமான்கனி (றலி.) ஆகிய மூன்று கலீபாக்கள்மீதும் அவதூறு சொல்வதும் இக்கூட்டத்தினரின் பொதுவான கொள்கையாகும். இத்துடன் அலவிய்யாக் கூட்டத்தினர் ஹஸ்ரத் அலீ (றலி.) அவர்களை நபியென்றும் கருதுகின்றனர்.

2. காரிஜிய்யா

காரிஜிய்யா கூட்டத்தினுள் பிரிந்த 12 கூட்டங்கள் வருமாறு:—

1. காரிஜிய்யா, 2. ரியாஜிய்யா, 3. தஃலபிய்யா, 4. ஜானபிய்யா, 5. கல்பிய்யா, 6. கூஜிய்யா, 7. கன்ஜிய்யா, 8. முஃதஜிலிய்யா, 9. மைமூனிய்யா, 10. முஹ்கமிய்யா, 11. அக்னிய்யா, 12. ஸிராஜிய்யா.

இமாம் ஜமாஅத்தாகத் தொழவேண்டியதில்லை, முஸ்லிம்கள் பாவம் செய்வதால் காபிராகிவிடுகின்றனர் என்பதும், அநியாயக்காரனான முஸ்லிம் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் மீறுவது ஜாயிஸ் ஆகும் என்பதும் இப்பன்னிரண்டு கூட்டத்தினரின் பொதுப்படையான கொள்கையாகும். இவர்களில் கன்ஜிய்யா என்ற வகுப்பினர் ஜகாத் பர்லு என்பதை ஒப்புக்கொள்வதில்லை. முஃதஸலிய்யாக்கள் தீமைகள் அல்லாஹ்வின் நாட்டத்தைக்கொண்டு உண்டாகுவதில்லை, மரித்தவர்களுக்கு 'ஈஸால் தவாப்' செய்யமுடியாது என்றும் கூறுகின்றனர்.

3. ஜபரிய்யா

இவர்களுள் பிரிந்த 12 கூட்டத்தின் விபரம் வருமாது:—

1. முஹதர்ரிய்யா, 2. அப்ஆலிய்யா, 3. முகிய்யா, 4. மப்றூகிய்யா, 5. நஜ்ஜாரிய்யா, 6. முத்தமல்லிய்யா, 7. கஸ்பிய்யா, 8. ஸாபிகிய்யா, 9. ஹபீபிய்யா, 10. கௌபிய்யா, 11. மக்ரிபிய்யா, 12. ஹஸ்பிய்யா.

இவ்வுலகத்தைய செல்வமானது எல்லோராலும் விரும்பத்தக்கதாகவும் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாகவுமிருப்பதால், அதனை இலவசமாய்க் கொடுப்பது புத்திக்கு பொருத்தமானதன்று. ஆகவே, ஜக்காத் கொடுக்கக்கூடாதென்பது இவர்களின் பொதுப்படையான கொள்கை. இவர்களில் "ஸாபிக்கிய்யா"க்கள் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதால் லாபமுமில்லை; பாவம் செய்வதால் நஷ்டமுமில்லை என்கின்றனர். ஹஸ்பிய்யாக்கள், தௌபாச் செய்வதையும், மறுமையில் அல்லாஹ்வின் தீதார் என்னும் தரிசனம் சுவர்க்கவாதிகளுக்கு கிடைக்கிறதென்பதையும் மறுக்கின்றனர்.

4. கத்ரிய்யா

இவர்களுட் பிரிந்த 12 வகுப்பினரின் விபரம் வருமாறு:—

1. அஹதிய்யா, 2. தனவிய்யா, 3, கியானிய்யா, 4. ஷைத்தானிய்யா, 5. ஷர்தகிய்யா, 6. வஹ்மிய்யா, 7. ருவைதிய்யா, 8. நாகி

ஸிய்யா, 9. முத்த பர்ரிய்யா, 10. காமதிய்யா, 11. நிஜாமிய்யா, 12. முத்தஜல்லிய்யா.

நன்மை தீமைகள் அல்லாஹ்வின் கற்பனைப் படி நிகழுவதில்லை; ஜனாஸாத் தொழுகை அவசியமில்லை; 'ரோஜெமீதாக்' என்னும் தலைநாளில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் காரியங்கள் உண்மையல்ல என்பன இப்பன்னிரண்டு கூட்டத்தாரின் பொதுப்படையான கொள்கையாகும். இவர்களில் அஹதிய்யாக்கள் பர்லுகளை அங்கீகரித்து சுன்னத்துக்களை நிராகரித்து விடுகின்றனர். தனவிய்யாக்கள் இரண்டு சிருஷ்டி கர்த்தாக்கள் அதாவது நன்மையை சிருஷ்டிப்பவன் யஜ்தான், தீமைகளை சிருஷ்டிப்பவன் அஹ்ரமன் என்றும் கூறுகின்றனர். ஷைத்தானிய்யாக்கள் ஷைத்தான் இல்லை என்கின்றனர்.

5. ஜஹ்மிய்யா

இவ்வகுப்பினுட் பிரிந்த 12 கூட்ட விபரம். 1. முஅத்தலிய்யா 2. முத்தராதிபிய்யா 3. முத்தரக்கிபிய்யா, 4. வர்திய்யா, 5. ஜர்கிய்யா 6. மக்லூக்கிய்யா, 7. இப்ரிய்யா, 8. பானிய்பா, 9. ஜினுதிகிய்யா, 10. லப்லிய்யா, 11. கப்ரிய்யா, 12. வாகிபிய்யா.

ஈமான் என்பது மனதிற்கு மட்டும்தான் சம்பந்தப்பட்டது, நாவால் அறிக்கையிட வேண்டிய அவசியமில்லை; "கப்ரில் முன் கர் நகீர்" என்ற மலக்குள் வந்து கேள்வி கணக்குகள் கேட்கிறார்கள் என்பது தவறான விஷயம். "ஹௌளுல் கௌதர்" இல்லை, "மலக்கல் மவ்த்" என்று ஒருவர் இல்லை என்பது இவர்களது பொதுவான கொள்கை. இவர்களில் 'முஅத்தலிய்யா' என்னும் கூட்டத்தினர் அல்லாஹ்வின் திருநாமங்களும் ஸிபத்துகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகள்; அவைகள் "க்ஷமாகிய" அநாதியன்று என்பதாகக் கூறுகின்றனர்.

இப்ரிய்யா என்ற வகுப்பினர் "நமது நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மிகவும் பேரறிஞராகவும், நிபுணராகவுமிருந்தார்கள்; றசூலாகயிருக்கவில்லை" என்று கூறுகின்றனர்.

6. மர்ஜிய்யா

இவர்களுட் பிரிந்த 12 கூட்டம் வருமாறு:—

1. தாரிகிய்யா, 2. ஷாயிபிய்யா, 3. ராஜிய்யா, 4. ஷாக்கிய்யா, 5. பைஹஷிய்யா, 6. அமலிய்யா, 7. மன்கூஸிய்யா, 8. முஸ்தனிய்யா, 9. அஷ்ரிய்யா, 10. பித்கிய்பா, 11. முஷ்மஹிய்யா, 12. ஹஷரிய்யா.

ஈமான் கொள்வது ஒன்றுதான் பர்லு; மற்றைய வணக்கங்கள் எதுவும் பர்லல்ல என்பது இப்பிரிவினரின் பொதுவான கொள்கை, ஷாகிய்யா என்ற வகுப்பினர் ஈமானில் சந்தேகம் கொண்டுள்ளனர். பைஹஷிய்யாக்கள் ஈமானுக்கு அசல் கல்வி ஆகவே மார்க்க விதிவிலக்குகளை நன்கறியாதவர்களெல்லாரும் காபிர்கள் என்று கூறுகின்றனர்.

இங்கு இவ்வெழுபத்திரண்டு கூட்டத்தாரின்கொள்கைகளும் வெகு சுருக்கமாக வரையப்பட்டுளது. இதல்லாமல் இவர்களது வணக்க முறைகளையும் திருவிழாக்களின் கொண்டாட்டங்களையும் சடங்குகளையும் விபரிப்பதாயின் இவ்வியாசம் விரிவடைந்து விடும். அதனால் விடுத்தனம்.

இக்கூட்டத்தினரின் பெயர் நாமங்களை நூல்களில் பார்க்கின்றோமாயினும், அவர்கள் எங்கேயிருக்கின்றனர் என்பதை நம்மில் ஒரு சிலரே அறிகின்றனர். இவ்வகுப்பினர் இதுபோழ்தும் ஆங்காங்குயிருந்து வருகின்றனர். குர்திஸ்தான், இராக் தேசத்தின் மலைப் பிரதேசம், ஷாம் தேசத்திலுள்ள லப்னான் பிரதேசம், வட இந்தியாவில் சில பிரதேசம், ஈரான் முதலிய நாடுகளில் இப்பிரிவினரில் அநேக கூட்டத்தினர் இருந்து வருகின்றனர். இப்பொழுதும் ஆங்காங்கு பல கூட்டத்தினர் புதிதாய் உதிக்கின்றனர். என்றாலும் அவர்களும் இந்த எழுபத்திரண்டு கூட்டத்தின் கொள்கைகளிலிருந்தே களவாடுகின்றனராதலின் அவர்களையும் இக்கூட்டத்திலேயே சேர்த்துக் கணக்கிடவேண்டியதுதான்.

இந்த எழுபத்திரண்டு கூட்டத்தினரையும் உம்மத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதே என்ற ஓர் கேள்வி எழலாம். அதற்கு தங்களை நபிபெருமானின் உம்மத்துகள் என்று சொல்லிக் கொள்பவரில் இந்த எழுபத்திமூன்று கூட்டங்களும் பிரிகின்றன என்று கருத்தமைத்துக் கொள்க.

இந்த எழுபத்திரண்டு கூட்டத்தாரையும் உண்மை முஸ்லிம்கள் என்று ஹாபிஸ் கூறுகிறார்கள். இவர்களது கொள்கைகளை நாம் விபரித்து விட்டோமாதலின் இதிலிருந்து ஹாபிஜின்கொள்கை முற்றும் விநோதமான தென்பதை நேயர்கள் விளங்கிக்கொள்வார்களாக.

நபி பெருமானின் உம்மத்துகள் ஒரே ஜமாத்தாக ஆரம்பமானார்கள். காலக்கிரமத்தில் இந்த எழுபத்திரண்டு கூட்டமும் பிரிந்தது. அசல்

பாடியாக ஒரு பெரும் கூட்டம் சுன்னத்தின் அஸ்திபாரத்தின் மீதிருந்து வருகிறது; அவர்கள் தான் நான்கு மதுஹபைச் சேர்ந்த முஸ்லிம்கள்; அவர்களுக்கிடையில் அதிகவித்தியாசமில்லை என்பதை முன்னமே நிரூபித்துவிட்டோம். அவர்களின் கொள்கைகள் நபி பெருமான் அவர்களின் சுன்னத்தின்மீது அஸ்திவாரமிடப்பட்டிருப்பதால்அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னத்என்றும், அவர்கள்பெருப்ஜமாஅத்தாகயிருக்கும் காரணத்தால் அல்லது ஸஹாபாக்களில் அபிப்பிராயபேதப்பட்ட விஷயங்களில் பெரும்பாலாரின் அபிப்பிராயப்படி நடந்து வரும் காரணத்தால் அவர்கள் 'ஜமாஅத்' என்றும், அதாவது அல்லுஸ்ஸுன்னத்து வல்ஜமாஅத்து என்று அழைக்கப்பட்டு வருகின்றனர். இக்கூட்டத்தைக் குறித்துத் தான் நபி பெருமானார் அவர்கள் ஈடேற்றம் பெறும் கூட்டமென்று முன்னறிக்கை செய்துள்ளார்கள். நபிபெருமான் அவர்கள் அறிவித்தபடி இவர்கள்தான் உலகத்தில் பெருங்கூட்டம்.

இனி வஹ்ஹாபி மத்ஹபைப்பற்றி ஆராய்வோம்: இஃது சமீப காலத்தில் முஹம்மதிப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவரால் உற்பவிக்கப் பட்டதாகும். ஆதிகாலத்தில் நான்கு இமாம்களும் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றி தக்க காரணங்களைக்கொண்டு நான்கு 'உசூல்'களை ஏற்பாடு செய்தார்கள். அதன்பின் யாரும் "முஜ்தஹிதே முத்லக்" என்னும் பதவியை எத்தவில்லை. பிறகு வந்த நிபுணர்களும் இந்நான்கு இமாம்களையே பின்பற்றி நடந்து வந்தார்கள். இதனால் இந்நான்கு மத்ஹபுகளில் ஒன்றைப் பின்பற்றியே நடக்கவேண்டும், வேறு மத்ஹபுகள் ஏற்படுத்தக்கூடாது என்பதின் பேரில் "இஜ்மாஉ" ஏற்பட்டு விட்டது. இந்த இஜ்மாஉக்கு "இஜ்மாஎஅமலீ" என்று சொல்லப்படும். இது விஷயங்கள் 'நூருல் அன்வார்', 'அஷ்பாஹு வன்னலாயிர்' முதலிய கிரந்தங்களில் சவிஸ்தாரமாய் எழுதப்பட்டுள்ளது. இதல்லாமல் வஹ்ஹாபி மத்ஹபில் இன்னும் அநேக இஜ்மாஉ களுக்கு விரோதமானகாரியங்கள் ஏற்பட்டுளது. இதனாலேயே அந்த மத்ஹபு முஸ்லிம்களால் நிராகரிக்கப்பட்டுப் போயிற்று.

காதியானிமதம்: இதனையும் ஹாபிஸ் மறந்து விடாமல் நல்ல கூட்டத்தில் கொண்டுவந்து சேர்த்துவிடப் பார்க்கின்றார். ஒரு போதும் இவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களல்லர். இவர்கள் நபிகள் திலகம் அவர்கள் உம்மத்தில் சேர்ந்தவர்களுமல்லர்.

ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் தங்களை இறுதி நபியென்று அருள் செய்தார்கள். அல்லாஹ்தஆலாவும் அவ்வாறே அருள் செய்தான். அதன்மீதே உலக முஸ்லிம்களின் ஒற்றுமை யிருந்து வருகிறது. இவ்வாறு முடிவு பெற்ற ஓர் மஸ் அலாவை உதாசினம் செய்து, தன்னைநபி என்று தஅவா செய்த மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானியை இவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆகவே அவர்கள் நபிகள் திலகம் அவர்களின் உம்மத்தின் வட்டத்தை விட்டு வெகுதூரம் அப்புறப்பட்டு விட்டனர். அவர்களை முஸ்லிம்களின் கூட்டத்தில் சேர்த்துக் கணக்கிடுவது அறிவீனமேயாகும்.

இக்கூட்டத்தினர்களைக் குறித்து நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் "எனக்குப் பின் முப்பது தஜ்ஜால்கள்—பொய்யர்கள் தோன்றி, தங்களை நபியென்று தாவாச் செய்வார்கள், ஆனால், நான் கடைசி நபியாக இருக்கிறேன்" என்று கூறியதற்கேற்ப இக்கூட்டத்தினர், தன்னை நபியென்றுதாவாச்செய்த மிர்ஜா குலாம் அஹ்மதைப் பின்பற்றுவதால், இவர்களை தஜ்ஜால் கூட்டத்தினர் என்றுகூறுவது மிகையாகாது. நமது ஹாபிஸுக்கு இக்கூட்டத்தில் பிரேமை இருப்பதால் சமயம் வாய்க்கும்போதெல்லாம் இதனைப் பிரஸ்தாபிக்காமலிருப்பதில்லை. தவிரவும், இவர்களைப் பக்கா சுன்னத்து வல்ஜமாஅத்தார் என்று ருஜுச் செய்யவேண்டுமென்ற நோக்கம் இவருக்கிருப்பதால் இவர் ஏனைய 72 கூட்டத்தாரையும் பிரஸ்தாபித்து, அதன் மத்தியில் தமது நோக்கத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முயன்றிருக்கிறார்.

முஸ்லிம் நேயர்கள் கூட்டங்களில் நல்லது கெட்டதை உணர்ந்து ஒருங்குவதோடு ஹாபிஜின் தவறான கொள்கைகளையும் உணர்ந்து அதற்காவன செய்வார்களாக.

சந்தா நேயர்கட்கு !

இதுவரை சந்தா செலுத்தாது பாக்கி யிருக்கும் கனவான்கள் உடனே தங்கள் பாக்கிகளை மணியார்டர்மூலம் அனுப்பி வைப்பார்களாக. இல்லையேல் அடுத்த 1-12-38-ல் வெளியாகும் மாசிகை வி. பி. செய்து அனுப்பி வைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வருங்கால யுத்தம் எங்ஙனம் நிகழும் ?

பிரான்ஸ், தனது பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, அநேக மைல்கள் தூரம் பூமியைக் குடைந்து இரும்பினாலான போர்தளங்களை நிர்மாணித்து தற்காப்பு அரண்களை "டெபின்ஸ் லைன்"களை ஏற்படுத்திக் கொண்டுளது. அந்தத் தற்காப்பு அரண்களுக்குள் மின்சார இயந்திர சக்தியினால் சுடும் பீரங்கிகள், மெஷீன்கன்கள், கோட்டைகள், பள்ளங்கள், மேடுகள், ராணுவ ஜாகைகள், பட்டாளங்கள் பயிற்சி ஸ்தலங்கள் மற்றும் எல்லா விதமான சாமான்களும் இருக்கும். அந்த மகா மர்மமான ஏற்பாட்டுக்குப்பெயர் Maginot Line (மாக்னெட் லைன்) என்பதாம். இந்த ஏற்பாடுகள் பூர்த்தியாகி விட்டால் அதன்பின் எந்தப் பெரிய வல்லரசும் பிரான்ஸை தாக்குவதென்பது முடியாது. இந்தப் பயங்கரமான மாக்னெட்லைன் எப்படி வேலை செய்யும், வருங்காலம் யுத்தம் நிகழ்ந்தால் அது எப்படி இருக்கும், இவைகளை யெல்லாம் விளக்கி ஐரோப்பிய ஓர் அறிவாளி எழுதியுள்ளார். அக்கட்டுரை "தேஜ்" பத்திரிகையிலிருந்து இங்கு மொழி பெயர்த்துப் பிரசுரிக்கப்படுகிறது. நண்பர்கள் ஊன்றி கவனிப்பார்களாக.

விஞ்ஞான அற்புதம்

ஐரோப்பாவில் சைன்ஸும் இன்ஜினீயரிங் கலையும் இதுகாலை மகா அற்புதங்களை யெல்லாம் உலகத்துக்கு அளித்து வருகின்றன. அதன் நமூனா ஒன்று இப்போது தயாராகி விட்டது. அதாவது, டென்கிர்க் என்ற இடத்திலிருந்து ஸ்விஸர்லாண்டு எல்லைப்புறம் வரைக்கும், பிரான்ஸ் பிரதேசத்தைச் சூழ்ந்து மிக உறுதியான இரும்புச் சுவர் ஒன்று எழுப்பப்பட்டுளது. இந்தச் சுவர் ஒரு பக்கல் ஜெர்மனி எல்லை வரைக்கும் மற்றொரு பக்கல் ருஷ்ய எல்லை வரைக்கும் போய் இருக்கிறது. இந்தச் சுவற்றின் நீளம் 600 மைல்களாகும்.

இந்த உறுதியான சுவர் ஸ்தாபிக்கப்பட்டதின் நோக்கம், எப்போதும் பிரான்ஸில் அமைதி நிலவ வேண்டுமென்றும், யுத்தம் ஏற்படுவதற்கான முகாந்தரமே இல்லாது போக வேண்டுமென்பது மாகும். அதாவது, திடீரென்று எந்த வல்லரசாங்கமும் படையெடுத்து வந்து தாக்குவதற்கு இடம்பாடே இல்லாமற் போக வேண்டுமென்பதேயாகும்.

பிரஸ்தாப இரும்புச் சுவர் கண்களுக்குத் தெரிய மாட்டாது. விஞ்ஞான முறையைக் கொண்டு ஒளி மயமாக்கப்பட்டு அது மறைந்து கிடக்கும். அதன் பொருட்டால் ஐரோப்பா தேசம் பல தீவுகளைப்போல் தனித்தனியாய் பிரிக்கப்பட்டதே போலாகிவிடும். பிரிட்டன் இதுகாலை இயற்கையாகவே ஒரு தீவாக இருப்பதுபோல், பிரஸ்தாப இரும்புச் சுவரின் காரணத்தால் பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய இதர தேசங்களும் தனித்தனி தீவுகளைப்போல் ஆகிவிடும். பிரான்ஸில் மேற்படி "மேக்னட் லைன்" ஏற்பாடானது பிரான்ஸை எல்லாவித எதிர்ப்புகளை விட்டும் பாதுகாக்கும் உறுதியான மதில்களுள்ள ஒரு கோட்டையைப் போலாகும்.

சுவர் அமைப்பு

டென்கிர்க் முதற்கொண்டு ஸ்விஸர்லாண்டு வரைக்கும் அதாவது 600 மைல் தூரம் நெடுக எழுப்பப்பட்டுள்ள இந்தச் சுவரின் அமைப்பு மகா அற்புதமாகும். இந்தச் சுவர் இருப்பதால், எப்ளிஸ் மலையின் உச்சிவரைக்கும் ஒன்றுமே தெரியாமல் மறைந்துபோய் விடுகிறது. ஆயினும், ஆங்காங்கு பூமிக்குமேல் கொத்தளம் போன்று மேடு எழுப்பப்பட்டு அதில் எலக்டிரிக் பீரங்கிகளும், மற்றும் ஒளி ஏற்பாடுகளும் செய்து வைக்கப்பட்டுளது. இவை பூமியைக் குடைந்து காங்க்ரீட்டினாலும், இரும்பினாலும் மகா உறுதியாய் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால், எந்த பீரங்கியின் குண்டுக்கும் தகராமல் அசையாது ஸ்திரமாய் நிற்கும். இதிலுள்ள ஒரு அற்புதம் என்னவெனின், இந்த அரணுக்குள்ளிருந்து கொண்டு, வெளியே நடப்பதைப் பார்க்கலாம்; வெளியே யுள்ள படைகள் மீதும், பறக்கும் விமானங்கள் மீதும் குண்டுகள் சுடலாம். எல்லைப்புறத்தைக் கடந்து

வரும் எவ்வித படையையும் சுட்டுத்தள்ளி நாசப்படுத்தி விடலாம். ஆனால் வெளியாட்கள் இந்த இரும்புச் சுவர் கோட்டைக்குள் என்ன நடக்கிறதென்பதை ஒரு சிறிதும் கண்டு கொள்ளவும் தெரிந்து கொள்ளவும் முடியாது.

இரும்பு மனிதன் வேலை

பிரஸ்தாப யுத்த யேற்பாடுகளில் மற்றொரு அபூர்வம் யாதெனில், மனிதர்கள் இருந்து செய்ய வேண்டிய வேலைகளை, இயந்திரமாகிய "இரும்பு மனிதன்" ஒழுங்காகச் செய்து முடிப்பதுதான். அந்த இரும்பு மனிதனுக்குப் பெயர் Robot (ராபோட்) என்பதாம். இந்த மெஷீன் மனிதன், தனக்குரிய இடத்தில் இரவும் பகலும் இருந்துகொண்டு, எதிரிகள் மீது ஆயுதங்களைப் பிரயோகிப்பான். மின்சார இயந்திரங்களின் ஸ்விச்சுகளை அழுத்தி, இயங்கச் செய்வான். இன்னும் பீரங்கிகளையும் குறி தவறாமல் சுடுவான். அந்த மெஷீன் மனிதனுடைய கண்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் அமைந்ததாகும். ஆகையால் சாதாரணக் கண்களுக்குத் தெரியாத வஸ்துக்களெல்லாம் வெகு தூரத்தில் இருக்கும் போதே இவனுடைய கண்ணாடிக் கண்களுக்குத் தெரிந்து விடும். உடனே அவன் தன் கடமைகளை நிறைவேற்ற முற்பட்டு எதிரிகளைச் சுட்டு வீழ்த்தி விடுவான்.

மற்றும் சாதனங்கள்

மேற்படி சுரங்கக் கோட்டைக்குள் கணக்கற்ற பேர்கள் இச்சமயம் வேலை செய்து வருகிறார்கள். ஆங்காங்கு 14000 பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பீரங்கிச் சுடுபவர், வெளியே வந்து பார்த்துத்தான் சுடவேண்டுமென்ற அவசியமில்லை. பூமிக்குள் இரும்புக் கோட்டைக்குள்ளிருந்து கொண்டே, அங்குள்ள விசித்திரக் கண்ணாடியின் மூலம், வெளியே காணப்படும் எதிரிகள் மீது பீரங்கியைப் பிரயோகிக்கலாம்.

இரும்புச் சுவரின் தடிப்பம் 40 அடி அகலமாகும். எப்படிப்பட்ட பீரங்கியை வைத்துச் சுட்டாலும், "பாம்" வைத்து வெடித்தாலும் இந்த எஃகுச் சுவரை அசைக்கவே முடியாது.

அத்துடன் அவ்வரணுக்குள் எவ்விதமான விஷவாயுவும் புகுவதற்கு மார்க்கமில்லை. சுருங்கக்கூறின், வெளிக்காற்றே ஓர் அணுவத்தனை கூட உள்ளே புகமாட்டாது. வெளிக்காற்றின் அவசியமில்லாதபடி அந்த அரண், விஞ்ஞான முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. ஆதலின், வெளியாட்கள் விஷவாயு குண்டு வீசி அந்த விஷப்புகை பரவினாலும், பிரஸ்தாப அரணுக்குள்ளிருப்பவர்கள், எவ்வித முகமூடியும் அணிந்துகொள்ளாமல் சர்வ சாதாரணமாய் வேலையை கவனித்துக் கொண்டிருக்கலாம்.

காற்று ஏற்பாடு

உள்ளேசூழும் கெட்ட காற்றுகளை வெளியே தள்ளவும், போதிய அளவு சுத்தமான நல்ல காற்றை கிரகித்துப் பரத்தவும், அவ்வரணுக்குள் "ஏர் கண்டிஷன்" என்ற விஞ்ஞான காற்று ஏற்பாடுகள், செய்யப்பட்டிருக்கிறது. அக்காற்றை கால நிலைக்கேற்ப சூடானதாகவோ, குளிர்ச்சியானதாகவோ மாற்றிக்கொள்ளலாம். ஜல வசதியும் அதற்குள் போதிய அளவு இருக்கும். வெளியிலிருந்து ஜலம் உள்ளே வரவேண்டிய நிர்ப்பந்தமில்லாதபடி பூமிக்குள்ளாகவே ஜலவசதியும் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

மின்சார சக்தி

பிரஸ்தாப இரும்பு அரணை அணுகுவதற்கு யாராலும் முடியாது. பல நூறு மைலுக்கு அப்பால் எதிரிகள் அரணை நோக்கி வருகிறார்களென்பதை கண்டு பிடித்து எதிரிகளை பீரங்கிகளால் அழித்துவிட வசதியுண்டு. அந்தத்தற்காப்பையும் மீறி எதிரிகள் இரும்புச் சுவர்களை யணுகி விடுவார்களாயின், அந்த க்ஷணமே எதிரிகளை ஒரு நொடியில் சாகவடித்துப் பிணமாக்கி விடுவதற்கு மின்சார சக்தியில் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது எதிரிகள் சுவாருகில் வந்து விட்டார்கள் என்றால், உள்ளேயிருக்கும் மின்சாரசக்தி பரத்தும் "பட்டனை" தட்டி விடுவார்கள். அவ்வளவுதான், உடனே இரும்புச் சுவர் வெளிப்புறம் பூராவும் அநேக ஆயிரம் "வோல்ட்" சக்தியுள்ள மின்சாரம் தாக்கி, எதிரில் வருவோர் மீது பட்டு, எல்லோரையும் உடனுக்குடன் பிணமாக்கி விடும். இரும்புச்சுவர் அருகிலும், அதற்கு உள்ளேயும் மின்சாரக் கம்பிகளினாலான வலை வைக்கப்பட்டிருக்கும். இது சாதாரணமாய் கண்களுக்குத் தெரியாது. அது தனக்குரிய திட்டப்படி எதிரிகளைத் தாக்கும்.

அபாய மணி

அரணுக்கு வெளியே எதிரிகள் வருகிறார்களென்பதை, அறிவிப்பதற்கு மின்சாரசூட்சுமத்

தினாலான அபாய அறிவிப்பு மணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. வெகு தூரத்தில் ஒரு பட்டாளம் வந்தாலும் சரி, ஆகாயத்தில் எதிரிகள் விமானம் பறந்து வந்தாலும்சரி, உடனே அபாய மணி அடிக்கத் தொடங்கிவிடும். எனவே அதைச் சுட்டுத் தள்ளுவதற்கு, பூமிக்குள் 100 அடியில் இருக்கும் அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்யத் தொடங்கி விடுவார். ஆள் இல்லாமலே, அபாய மணி அடித்ததும் இரும்பு மனிதனின் அசைவு மூலம் பீரங்கி ஒலித்து எதிரிகளை நிர்மூலப்படுத்தும் சாதனமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் இரவும் பகலும் வேலை நடந்து கொண்டேயிருக்கும்.

மலைகளுக்கடியில் கோட்டை

பிரான்ஸில் இப்போது அநேக மலைகள் உள்ளே சுரண்டப்பட்டு "டொக்க"லாக யிருக்கின்றன. இவைகள் எதற்காக குடையப்பட்டுள்ளனவென்பது பாமர ஜனங்களுக்குத் தெரியாது. இவையெல்லாம் மேலே பிரஸ்தாபமான யுத்தத் தற்காப்பு அரண் ஏற்பாட்டிற்காகவேயாம். அங்கு, ராணுவங்களை மிகப் பாதுகாப்பாக வைப்பதற்கு உறுதியான உருக்குக் கோட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. திடீரென்று தோன்றும் எதிரிகளின் எப்படிப்பட்ட எதிர்ப்புகளையும் இதனால் சமாளிக்க முடியுமாம்.

இன்னமும் இதுபோன்ற பல அபூர்வ முறைகளை யுத்த ஏற்பாடுகளுக்கென்று பிரான்ஸ் தயாரித்து வருகின்றது. இந்த ஏற்பாடு பூர்த்தியடைந்துவிட்டால் பிரான்ஸை எதிர்க்க யாராலும் முடியாதாம். இதையெல்லாம் பிரான்ஸ், தன்னுடைய தற்காப்புக்காகவே செய்து கொள்வதாய் சொல்லிக் கொள்ளுகிறது.

ஹஸ்ரத்தமீம்பின் அஸத் (ரலி)

(ஹாபிஸ் E. M. A. R. தென்காசி வரைவது)

முஸ்லிம் சோதரீர்! நாம் இன்று இவ்வளவு க்ஷீணதிசை யடைந்திருப்பதற்கு முதற் காரணம் என்னவெனின், நமது முன்னோர்களான பெரியார்களின் வாழ்க்கை சரிதைகளையும், நம் மார்க்கத்திற்காக அவர்கள் செய்துள்ள தொண்டுகளையும், தியாகங்களையும் உணராததேயாகும். அன்னார்களது சரித்திரங்களை நாம் சற்று புரட்டிப் பார்ப்போமாகில், அவர்களது இஸ்லாமிய பக்தியும், அதற்காக அவர்கள் திரிகரண சுத்தியோடு செய்த தியாகமும் நமக்கு நன்கு புலனாகும். அவ்வாறான பெரியார்களின் வாழ்க்கை சரிதத்தை இன்று முன்மாதிரியாகக்கொண்டு நாம் வாழ்வோமானால் இத்திசை யடைந்தே இருக்க மாட்டோம். ஆதலால் அப்பெரியார்களில் ஒருவரான ஹஸ்ரத் தமீம்பின் அஸத் (ரலி.) அவர்களின் சரிதத்தை கீழ் தருகிறேன், சற்று கவனிப்பீர்களாக.

ஹஸ்ரத் தமீம்பின் அஸத் (ரலி.) அவர்கள் "பனூஸஅத்" என்ற வம்சத்திலுதித்தவர்கள். அன்னார் நாயகமவர்களின் உகந்த சிநேகிதராயிருந்தார்கள். பெருமானவர்கள் மதீனாபதிக்கு ஹிஜ்ரத் சென்றபின் இஸ்லாத்தைத் தழுவியதுடன், 'பத்ரு' யுத்தத்தில் பெருமானவர்களின் மெய்க்காப்பாளராகவு மிருந்திருக்கிறார்கள். மற்ற யுத்தங்களிலும் பங்கெடுத்திருக்கிறார்கள்.

குணாதிசயங்கள்

ஹஸ்ரத் தமீம் (ரலி) அவர்கள் இனியமொழியும், கனிந்த மனதுமுடையவர்கள். அத்துடன வெளிரங்க ஆடம்பரங்களையும், பிறர் மதிக்க வாழவேண்டுமென்ற அகப் பெருமையையும் அறவே வெறுத்து வந்தார்கள். எளிய வாழ்க்கையே சிறந்ததென்று போதிப்பதுடன் தாங்களும் அவ்வாறே நடைமுறையிலும் காட்டி வந்தார்கள். தங்களிடம் கேட்பவருக்கு இல்லையெனாது தங்களால் இயன்றளவு தருமோபகாரம் அளித்து வந்தார்கள். சுருங்கக்கூறின் அவர்களிடம் ஒருவர் கேட்டுவிட்டு நிராதரவாகப் போனதே கிடையாது.

பெருமான் (ஸல்.) அவர்களுக்கு பணிவிடை.

ஹஸ்ரத் தமீம் (ரலி.) அவர்கள் இருலோக ரக்ஷகர் நபி பெருமான் (ஸல்.) அவர்களிடம் அளவற்ற அன்பு பாராட்டி வந்தார்கள். நாயக

மவர்களுக்கு பணிவிடை செய்வதையே தங்களது பெருங் கடனாகக் கொண்டார்கள். நாயகமவர்களுக்கு ஊழியம் செய்வதிலேயே தங்களது வாழ்நாளைக் கழித்தார்களென்று கூறுவது மிகையாகாது.

நாயகமவர்களின் பணிவிடையிலும், அவர்களது சகவாசத்திலுமிருந்ததின் காரணமாக, அன்னார் ரசூலவர்களிடமிருந்து அநேக பொன்மொழிகளை வெளியாக்கி யிருக்கிறார்கள். அவர்களால் "ரிவாயத்" செய்யப்பட்ட 95 ஹதீதுகள் கிரந்தங்களில் காணப்படுகிறது. அவைகளெல்லாம் மனிதனின் முன்னேற்ற விஷயமாகவும், மானிடர் ஒருவருக்கொருவர் எவ்வாறு சம்பந்தம் வைத்துக்கொள்ளல் வேண்டுமென்பனபோன்ற விஷயங்களைத் தழுவியதாகவுமே யிருக்கின்றன. மேலும், அன்னாரின் அறிவின் ஆராய்ச்சியானது அறிவாளர்களால் போற்றப்படுவதாகவுமிருந்தது. பெருந்தன்மையான குணமும் ஆராய்ச்சியில் வல்லவர்களாகவுமிருந்திருக்கிறார்கள்.

இஸ்லாமிய பிரசாரம்

ஹஸ்ரத் தமீம் (றலி.) அவர்களுக்கு இஸ்லாமிய பிரசாரத்தில் அளவற்ற அன்பு இருந்து வந்தது. அவர்கள் வாரத்தில் இருமுறைகுக் கிராமந்தோறும் சென்று, விக்ரஹ பூஜையாளர்களிடம் இஸ்லாத்தின் தத்துவங்களையும், குணதிசயங்களையும் எடுத்துரைப்பார்கள். இந்த ஒரு பெரும் முயற்சியினால் ஏறக்குறைய 140 விக்ரஹ வணங்கிகள் இஸ்லாத்தை தழுவியிருக்கிறார்கள்.

அவர்களின் பிரசங்கத்தில் ஒருவித கவர்ச்சியும், சாதாரண ஜனங்களும் புரிந்துகொள்ளும் தன்மையும் அடங்கியிருந்தது. அவர்களது பல பிரசங்கங்களில் ஒன்று பின்வருமாறு :—

"எப்புகழும் இறைவனுக்கே உரியனவாகுக. இருலோகத்துக்கும் அவனே அதிபன். அவன் தனித்தவன், இணையற்றவன், சகல நன்றிகளுக்கும் அருகதையானவன்.

"அன்புமிக்க சோதரர்காள்! நம்முடைய இந்த வாழ்க்கையானது இறைவனிடம் சம்பந்தம் வைப்பதைவிட்டு தனித்திருக்கிறது. இது பெரும் பரிதாபமே! நித்திரை விட்டெழுங்கள்! உங்களது சகல சக்திகளையும் இறைவனுக்காக தியாகஞ் செய்யுங்கள். நீங்கள் அந்த இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து அவனது அன்புக்கு பாத்திரமாவீர்களாகில், அவன் தனது அருள் சொரியும் வாயலை உங்களுக்குத் திறந்து, உங்களது தவறுகளை மன்னிக்கத் தயாராக விருக்கிறான். ஆனால், நீங்கள் இந்த அற்ப வாழ்வை நம்பி, இதுவே சதமென நம்பி மறு உலகத்திற்கு வேண்டிய சாதனங்களைக் கைக்கொள்வதைவிட்டு வாழா யிருக்கிறீர்கள். அதைப் பற்றி சிந்தனையற்றிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதே.

சகோதரர்களே! வணக்கத்திற்கு அருகதையானவன் அந்த இறைவனேயன்றி, வேறு யாருமில்லை. அவனே சகல சிருஷ்டிகளையும் சிருஷ்டித்தான். அவனே எல்லாவற்றிற்கும் அதிபதி.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்.) அவர்கள் சகல வித மதிப்பிற்கும் உரியவர்கள். அவர்களிடம் அன்பு, நீதம், தயாளம் எல்லாம் ஒருங்கே இடம் பெற்றிருக்கின்றன. அவர்களின் வாழ்க்கையானது நேர்வழிக்கோர் வெளிச்சமாயிருக்கிறது ஆதலால், மடமை யென்ற இருளைவிட்டு இஸ்லாமின் ஒளியில் வந்து கூடுங்கள். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவானாக" என்பதே.

பெருமானின் திருச்சமுகத்தில் பெரும் மதிப்பு.

நம் பெருமான் (ஸல்.) அவர்களின் திருச்சமுகத்தில் ஹஸ்ரத் தமீம் (றலி.) அவர்களுக்கு பெரும் மதிப்பிருந்தது. பெருமானவர்களும், அவர்களின் இஸ்லாமியப் பற்றிற்காக ரொம்ப சங்கை செய்துகொண்டிருந்தார்கள். தமீம் (றலி.) உட்காருவதற்காகத் தங்களது மேன்மையான துப்பட்டியைக்கூட விரிப்பார்கள்.

ஒருசமயம் 'அஸ்லம்' என்ற கபீலாவிலிருந்து சில மனிதர்கள் பெருமானவர்கள் சமுகத்திற்குவந்து எங்களுக்கு இஸ்லாமிய சட்டங்களைக் கற்றுக்கொடுப்பான் வேண்டி, ஒரு மனிதரை அனுப்பிவையுங்கள் என விண்ணப்பித்துக்கொண்டார்கள். உடனே பெருமானவர்கள் ஹஸ்ரத் தமீம் (றலி.) அவர்களையே தேர்ந்தெடுத்தார்கள். பனூ அஸ்லம் கபீலாவின் தலைவரிடம், நான் உங்களுக்காக ஒரு மனிதரைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன், அவர் நல்ல குணவானும், பிறர் கஷ்டப்பட சகியாதவரும், இனிய மொழியுடையவருமானவர். ஆண்டவன் அவருக்கு கிருபை, நீதம், தயாளம் இவைகளால் பரிபாலிக்கப்பட்ட ஹிருதய கமலத்தை கொடுத்திருக்கிறான். அவர் என் சொந்த குலத்தின் ஓர் அங்கத்தினராக இல்லாவிடினும், அவ

ருடைய நல்லெண்ணமும், பக்தி விஸ்வாசமும் அவரை இவ்வளவு பெருங் கியாதிக்குள்ளாக்கியது. எதுவரையெனின், அவரை இப்பொழுது என் குலத்தவராகவே மதிக்கின்றேன். ஆதலால், நீங்கள் அவரிடம் கண்ணியமாக நடந்து கொள்ளல் வேண்டும். அவருக்குத் தொந்தரவு கொடுத்தல் எனக்குத் தொந்தரவு கொடுத்தது போலாகும் எனக் கூறியனுப்பினர்கள்.

ஹஸ்ரத் தமீம் (றலி.) அவர்களிடம் பெருமானவர்களுக்கு எவ்வளவு கண்ணியமிருந்ததோ அதைப்போன்று அவர்களின் தோழர்களிடமும் இருந்து வந்தது. ஏனெனில், ஹஸ்ரத் உமர் (றலி.) அவர்கள் பலசமயங்களிலும் ஹஸ்ரத் தமீமைப் பார்த்து "இறைவன் உங்களுக்கு அருள் புரியட்டும்; நீங்கள் அளவற்ற மதிப்பிற்குரியவர்கள்; நாங்கள் பெருமான் (ஸல்.) அவர்களின் நாவிலிருந்தே உங்களைப்பற்றிய புகழையும், கண்ணியத்தையும் கேட்டிருக்கிறோம்; நாங்களும் பார்த்தவரையில் உங்களைப் போன்ற ஒருவரை சகிப்புத்தன்மையிலும், நாவன்மையிலும் கண்டதில்லை'' எனச்சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

வணக்கத்தில் எல்லையற்ற பிரீதி

ஹஸ்ரத்தமீம் (ரலி.) அவர்களுக்கு மானிட இச்சையை அடக்கி இறைவணக்கம் புரிவதில் அளவற்ற பிரீதியிருந்தது. அநேக ஆண்டு 'இஷா'தொழுகைக்காக "வுலு" (அர்த்த ஸ்நானம்) செய்ததைக்கொண்டே 'பஜ்ரு' தொழுகையையும் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். இரவில் அதிகமாக தொழுவார்கள். அவர்களின் அன்புமிக்க நண்பரான "துவைப்பின் அஸ்லம்'' (ரலி.) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:—"நான் தமீமைப் போன்று மனத்தாசையை அடக்கி வணக்கத்திலேயே வயதை சிலவழித்தவரைப் பார்த்ததேயில்லை. தமீம் இரவும் பகலும் 250'ரக்க அத்து'களுக்கு அதிகமாகவே தொழுவார். அவர் மிகுதி நேரங்களிலும் அழுதுகொண்டேயிருப்பார். எதுவரையெனில், அவர் தொழுகுமிடமெல்லாம் கண்தண்ணீரால் ஈரமுற்றுவிடும். சில சமயங்களில் அதிகாலையிலேயே எழுந்து மைதானங்களுக்குச் சென்று "ஸஜ்தா" (சாஷ்டாங்கம்) செய்தவராக இறை பக்தியால் துதிபாடிக்கொண்டிருப்பார். அவரது எண்ணமெல்லாம் ஆண்டவனை ஞாபிப்பதிலும் அதே கவலையிலுமே சென்று கொண்டிருந்தது'' என்பதே.

வெளி ஆடம்பரங்களில் வெறுப்பு

ஹஸ்ரத் துவைப் மேலும் கூறுவதாவது:— தமீம் (ரலி.) வெளி ஆடம்பரங்களை அறவே வெறுத்து வந்தார். அவர் வெளி ஆடம்பரங்களை விரும்பும் தனது நண்பர்களிடம் இந்த ஆடம்பரங்களினால் மறு உலகத்திற்கு என்ன உபயோக மேற்படப்போகிறது; இந்த வாழ்க்கை நிலைத்திருக்குமென்று நீங்கள் கருதவேண்டாம்; இந்த அற்ப வாழ்விலிருந்து வருங்கால வாழ்விற்கு வழி தேடிக்கொள்ளுங்கள்; நீங்கள் கபரஸ்தான் இருக்குமிடம் சென்று பார்த்தீர்களா? அங்கு எத்தனை சமாதிகள் இடிந்து பாழடைந்து கிடக்கின்றன. அந்தந்த சமாதியுடையவர்கள் அவர்களது வாழ்நாளில் என்னென்ன மனக்கோட்டைகள் கட்டியிருந்திருப்பார்கள். அவையனைத்தையும் மரணமென்ற பெருங்காற்றானது தகர்த்தெறிந்து மண்ணுடன் மண்ணாக சேர்த்து விட்டது. இன்று அந்த சமாதிகளுக்கு அழகு இருக்கிறதா? அவர்களை அணைப்பதற்கு அந்த மண்கள் தவிர வேறொன்றும் இல்லையே. ஆதலால் வருங்கால வாழ்க்கைக்கு இப்பொழுதே தயார் செய்து கொள்ளுங்கள்; மறதி என்ற மயக்கத்தை விரட்டியடியுங்கள், என்று அடிக்கடி கூறி வந்தார்கள்.

தயாள குணத்தில் தலைசிறந்த வள்ளல்

ஹஸ்ரத் தமீம் (ரலி.) அவர்கள் தங்களது வாழ்க்கையில் ஒவ்வொன்றுக்கும் காலநிர்ணயம் ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்களது வழமை என்னவெனின், மாதத்தில் இருமுறை ஏழை எளிய நண்பர்களுக்கெல்லாம் விருந்தளிப்பதுடன், அவர்களுக்குப் பொருளுதவியும் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் துவைப் (ரலி.) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் தமீமிடத்தில் இரக்க சிந்தனையும், ஏழை எளியோரிடம் பக்ஷாத்தாபமும் மிகுந்திருந்தன. ஒரு சமயம் அவருடைய அயல்வீட்டு ஏழை ஒருவர் வந்து தமீமிடத்தில், அபுல் அம்ஜதே! எனக்கு சில கடன் தொல்லைகள் இருந்துகொண்டு என்னை வாட்டுகிறதுமல்லாமல் எனது வேலைகளும் வீணாகப் போய் விடுகிறது; என்ன செய்வதென்று தெரியவில்லை எனக்கூறினர். உடனே தமீம் அவர்கள் உனக்கு எவ்வளவு கடனிருக்கிறதென வினவ, 300 ரூபாய் என அந்த மனிதர் பதிலிறுத்தார். அப்பொழுதே தமீமவர்கள் தன் சார்பாக அந்த முன்னூறு ரூபாய் கடனை

யும் தீர்த்து அந்த மனிதனின் மனக்கவலையை நீக்கினார்கள்.''

மரணம்

இத்தனை பெரிய உத்தம தியாகியான ஹஸ்ரத் தமீம் (ரலி.) அவர்கள் (ஹாபிஜ் இப்னு ஹஜர் (ரஹ்.) அவர்களின் அபிப்பிராயப்படி) ஹிஜ்ரி இருபதாவது வருஷம் ரபீஉல்அவ்வல் பிறை ஐந்தில் இறைவனின் திருசமூகம் சென்றார்கள். (ரலியல்லாஹு அன்ஹு)

இஸ்லாமிய உலகச் செய்திகள்

யெமன் ராணுவத்தில் துருக்கி ஆதிக்கம்

யெமன் தேச அதிபரான இமாம் எஹ்யா அவர்கள், ''தேசத்திலுள்ள எல்லா சேனைகளும், தேசப்பாதுகாப்பிற்காக எல்லா வித தியாகங்களுக்கும் தயாராய் இருக்க வேண்டும்'' என்று தமது இராணுவாதிகாரிகளுக்கு சுற்றறிக்கை வெளியிட்டு விட்டார். எனவே, ராணுவ ஏற்பாடுகளெல்லாம் வெகு தீவிரமாய் நடைபெற்று வருகின்றன.

மேலும், யெமன் தேச எல்லைப்புறகளில் ங்காங்கு கோட்டைகளும், அரண்களும் மக்கும் நிர்மாண வேலையும் வெகு மும்முர டைபெற்று வருகின்றது. யெமனில் சில ளும் குன்றுகளும் பாதுகாப்பற்றவையாகவும், எதிரிகள் வருவதற்கு இடந்தருபவைகளாகவுமிருக்கின்றன. அவைகளிலெல்லாம் ராணுவங்கள் தங்கியிருந்து பாதுகாப்பதற்கு அங்கெல்லாம் சிறுசிறு கோட்டைகள் அமைக்கும் வேலைக்கு யெமன் தேசாதிபதியின் கோரிக்கையின்படி துருக்கி ராணுவ அதிகாரிகள் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்கள். இதற்காக துருக்கி அதிகாரிகள் ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். இத்திட்டத்தை யெமன் அரசாங்கம் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டாயிற்று. இந்த ஏற்பாடுகளை நேரில் இருந்து கவனிப்பதற்காக, ஐந்து துருக்கி ஆபீஸர்கள் இஸ்தம்பூலிலிருந்து புறப்பட்டு ஹதீதாவுக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

* * *

இப்னுஸுஊது ஆலோசனை

யெமன் அரசாங்கம் இதுசமயம் ஆரம்பித்துள்ள ராணுவ ஏற்பாடுகளுக்கு நஜத்ஹிஜாஸ் அரசர் சுல்தான் இப்னுஸுஊதவர்கள் ஏற்கனவே, ஆலோசனையும் சம்மதமும் அளித்துவிட்டார். மேலும், இப்னுஸுஊதுடைய போதனைப் பிரகாரம்தான் யெமன் அரசாங்கம் ராணுவக் காரியங்களை நடத்துகிறதென்றும், துருக்கியுடையசகாயத்தைக்கோரிக்கொண்டதென்றும் சொல்லப்படுகிறது. சுருங்கக்கூறின், இப்போது யெமன் தேச ராணுவமனைத்தும் துருக்கி அதிகாரிகள் ஆதிக்கத்திலேயே இருக்கிறதென்னலாம்.

* * *

குராஸான், தப்ரேஸ், கிர்மான் ரயில்வே

ஈரானில், இந்தியக் கடல் பிரதேசத்தையும் கேஸ்ப்பின் பிரதேசத்தையும் இணைத்துவைப்பதற்காக பெருத்த ஏற்பாட்டில் ரயில்வே லைன் போடப்பட்டு வருகிறது. இதைப்பற்றி அரசியல் ஞானமுள்ளவர்களும் பொதுஜனங்களும் பரபரப்பாய் பேசிக்கொள்கிறார்கள்.

ஈரான் அரசாங்கத்தார், அந்தப் பெரிய ரயில்வே லைனுடன், தேசத்தின் நன்மைக்காக வேண்டி, சிலஉப லைன்களையும் இணைப்பதற்காக தீவிரமாய் முயன்று வருகின்றனர். இத்திட்டப்படி முதன்முதலாய் மூன்று ரயில்வே லைன் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதாவது (1) தெஹ்ரானிலிருந்து குராஸான் (ஆப்கானிஸ்தான் எல்லைப்புறம் வரை) ஒரு லைன்; (2) தெஹ்ரானிலிருந்து தப்ரேஸ் வரை (ஈரான் தேசத் தலைநகரைத் துருக்கியுடன் இணைப்பது) ஒரு லைன்; (3) தெஹ்ரானிலிருந்து கிர்மான் வரை ஒரு லைன்; ஆக 3 லைன்களும் அதிவிரைவாய் போடப்பட்டு வருகின்றன.

ஈரானில் உட் கலகம்

ஈரானில் சிலநாட்களாக உட் கலகங்களும் சச்சரவுகளும் தாண்டவமாடி வருகின்றன. பூஷஹர், ஷீராஸ், இஸ்பஹான் ஆகிய மூன்று பிரதேசத்தின் மூன்று பெரிய முஜ்தஹித்களை (கலகத் தலைவர்களை) ஈரான் கவர்ன்மெண்டார் கைது செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் யாதெனின், தற்போது நாட்டில் புகைந்துகொண்டிருக்கும் உட் கலகங்களுக்கு ஆதரவாய், அம்மூவரும் அரசாங்கச் சட்டங்களை மீறினார்களென்பதும், ராணுவச் சேவைக்குத் தங்களை சமர்ப்பிக்க மறுத்துவிட்டார்கள் என்பதுவுமேயாகும்.

* * *

ராணுவத்துக்கு மதக் கல்வி

ஈரான் அரசர் ரிஜாஷாபெஹ்லவி அவர்கள், சென்ற வாரம் தம் ராணுவங்களுக்கு உபதேசம் செய்தார்:—“இஸ்லாத்தையும் தேசத்தையும் பாதுகாப்பதே ஒவ்வொரு ஈரான் சிப்பாஹியுடையவும் முக்கிய கடமையாயிருத்தல் வேண்டும்; இஸ்லாத்துக்காக ஒவ்வொருவரும் தம்மை தியாகம்செய்ய எச்சமயத்திலும் தயாராய் இருத்தல்வேண்டும்'' என்பதே அப்பிரசங்கத்தின் சாரம்.

ஈரான் ராணுவ சிப்பாய்களுக்கு மதக்கல்வி போதிய அளவு இல்லையென்ற ஓர் குறை எடுத்துக்கூறப்பட்டது. அதை யொட்டி ஒரு தற்காலிகப் பரிகாரம் கையாளப்படுகிறது. ராணுவ சேவையில் ஈடுபட்டுள்ள மதப் பெரியார்களான ‘முஜ்தஹிதீன்’கள் தினந்தோறும் குறிப்பிட்ட நேரம், ராணுவ சிப்பாய்களுக்கு குர்ஆன் ஷரீபும், மதபோதனைகளும் கற்பிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்காரியத்தின் மேல் பிரார்வை ஆகா பாஷி முஹமத் அப்பாஸ் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பரிகாரம் ஒரு வருஷம் வரை தொடர்ந்து நடைபெறும். அத்துடன், இனி ராணுவத்தில் சேர்க்கப்படுவதற்கு பயிற்சியளிக்கும் இளைஞர்கள், மதக்கல்வியும், குர்ஆனும் தெரிந்தவர்களாயிருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் ஏற்பட்டிருக்கிறது.

* * *

எகிப்து—இராக் ஒற்றுமை

இராக் அன்னியநாட்டு மந்திரி, இஸ்கந்தரியா (அலெக்ஸாண்டிரியா) நகருக்கு வந்துசேர்ந்தார், எகிப்து பிரதம மந்திரி அவரை வரவேற்று, விருந்தளித்து உபசரித்தார். இரண்டு தேச மந்திரிகளும் சந்தித்துத் தனித்து வெகுநேரம் அரசியல் விஷயமாய் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

இராக் மந்திரியும் எகிப்து மந்திரியும் சந்தித்துப்பேசியது பலஸ்தீன் விஷயமாய்த்தானிருக்குமென்று தெரியவருகிறது. பலஸ்தீன் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில், எகிப்தும் இராக்கும் ஒற்றுமைக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து கொண்டார்களாம். இவ்விஷயம் அதிசீக்கிரம் பகிரங்கத்துக்கு வந்துவிடுமென்று கருதப்படுகிறது.

* * *

இராக் மக்கள் சிரத்தை

பலஸ்தீன் அராபியர்கள்மீது அநுதாபங் கொண்டு இராக் பொதுஜனங்கள் பல கடமைகள் புரிந்து வருகிறார்கள். காயமும் நஷ்டமும் பட்ட அராபியர்களுக்கு நிதி திரட்டி அனுப்புகிறார்கள். சில தினங்களுக்குமுன், ஜும்ஆ தினத்தில் பலஸ்தீன் ஞாபகார்த்தம் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலதிறப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் அக்கொண்டாட்டத்தில் பொறுப்புடன் கலந்து கொண்டனர். பலஸ்தீன் நிலைமையை விளக்கி பல அறிஞர்கள் பிரசங்கம் புரிந்தார்கள். இறுதியில் பலஸ்தீனில் துன்பம் வருந்துவோர்களின் க்ஷேமத்துக்காக வேண்டி சந்தா வசூலிக்கப்பட்டது.

* * *

ஈரானில் ரேடியோ ஸ்கூல்

பொது இலாகா மந்திரிசபையார், ஈரானில், ஒரு ரேடியோ, கம்பியில்லாத்தந்தி பயிற்சி கல்விசாலை யொன்றை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்த ஏற்பாட்டினால் ஈரான் சர்க்காரின் நோக்கம் யாதெனில், ஈரானின் எல்லா நகரங்களிலும் ரேடியோ ஸ்டேஷன்கள் ஏற்படுத்தி, உலகச் செய்திகளை தேச மக்கள் உணர வழிசெய்து கொடுக்கவேண்டுமென்பதேயாகும். மேற்படி கலாசாலையில் இரண்டு வருஷம் பயிற்சியளிக்கப்படும். மாணவர்களுக்கு சர்க்கார் சார்பாக உதவிச் சம்பளமும் அளிக்கப்படும். பயிற்சி பூர்த்தியான பிறகு இவர்கள் சர்க்கார் இலாகாக்களில் நியாயமான சம்பளத்தில் 5 வருஷங்கள் உத்தியோகம் வகிக்கவேண்டும்.

218 ०५०५

சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்கு முள்ள சந்தா பணத்தை முன் பணமாக கொடுத்து அரும்மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண்டியது முறையாக இருக்க, அநேக சந்தாதார்கள் வருடம் முடிவடையும் இது காலை வரை சந்தாப்பணத்தை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர்.

ஆகவே அன்பர்கள், சமீபத்தில் வருடம் முடிவடைவதைக் கருதி தங்களது சந்தா பாக்கியை தாமதமன்றி உடனே மணியார்டர் அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிருேம். இல்லையேல் நாளது டிஸம்பர்மாதம் முதல் தேதி வெளியாகும் மாசிகையை வி. பி. செய்து அனுப்பிவைக்கப்படு மென்பதை தெரிவித்துக் கொள்கிருேம்.

N. B வி. பி. செய்வது கொண்டு வீண் செலவு ஏற்படுவதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

நமது சந்தாதார்களில்,

மலாயா, சிங்கப்பூர், மலாக்கா :—இவ்விடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை ஆலீஜனுப் அல்ஹாஜ் K. A. பகீர் முகம்மது சாஹிப் (P. O. Box No. 27, கிள்ளான்) அவர்களிடமும்,

பினங் :—இவ்விடத்திலுள்ளவர்கள் ஆலீ ஜனுப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் (27, Pitt Street பினங்) அவர்களிடமும்,

சிலோன் :—கொழும்பு முதலிய சிலோன் பகுதிகளிலுள்ள சந்தா நேயர்கள் மெஸ்ஸர்ஸ் A. M. K. ஆலிம் சாஹிப் (144 கைசர் தெரு, கொழும்பு) அவர்களிடமும் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டியது.

குறிப்பு :—இவ்விடங்களிலுள்ளவர்கள் நேரே மணியார்டர் ஆபீஸுக்கு அனுப்பவதானலும் அனுப்பிவிடலாம்.

மானேஜர்,

ஹிபாஜத்து இஸ்லா

43, போஸ்

…ரீபத்துல் ஔகாத் (நேரங்களின் விபரம்)

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதையம் முதலியவை … இதன்கீழ் குறிப்பிடுகிறோம். இதிற் கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியனவாகும். …சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் $69\frac{1}{2}$ மையிலுக்கு 4 நிமிஷம் கூட்டியும் நேர்கிழக்கில் உள்ளவர்கள் $69\frac{1}{2}$ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும் சுப்ஹையும், சூரியோ தயத்தையும் 5 நிமிஷம் முந்தியும் அனுஷ்டிப்பது நலம்.

இதனடியில் சில முக்கியமான ஊர்களையும், அவைகள் சென்னையைவிட்டு எவ்வளவு தூரம் மேற்கில் இருக்கிறதென்பதையும், அவ்விடத்திலிலுள்ளவர்கள் கூட்டிக்கொள்ளவேண்டிய நிமிஷங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குச் சமீபத்திலுள்ளவர்கள் அதற்கேற்றவாறு தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்வார்களாக.

ரமலான் மீ	1௳ 6	7௳ 12	13௳ 18	19௳ 24	25௳ 30
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.	ம. நி.
ஸஹர் முடிவு	4—25	4—28	4—30	4—33	4—35
சுப்ஹுசாதிக் (மெய்வெள்ளை)	4—38	4—40	4—43	4—45	4—49
சூரியோதயம்	6—2	6—4	6—6	6—8	6—10
சூரியாஸ்தமனம்	5—45	5—43	5—40	5—40	5—39

முக்கிய பட்டணங்கள்.

ஊர்	மைல்	நி	ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	$3\frac{1}{2}$	தாராபுரம்	193	$11\frac{1}{4}$
திருவண்ணாமலை	59	4	பெங்களூர்	187	$10\frac{3}{4}$
கொழும்பு	25	$1\frac{1}{2}$	கோயமுத்தூர்	241	14
இராமேஸ்வரம்	70	4	காஞ்சிவரம்	43	$2\frac{1}{2}$
…ட்டுக்கோட்டை	67	4	வேலூர்	81	$4\frac{1}{2}$
…ர்குடி	35	2	ஆற்காடு	81	$4\frac{1}{2}$
…ம்	31	2	தூத்துக்குடி	147	$8\frac{1}{2}$
	80	4	ராமனாதபுரம்	103	6
	39	2	புதுக்கோட்டை	201	12
	42	2	திருச்சினாப்பள்ளி	111	$6\frac{1}{2}$
	37	2	சேலம்	144	$8\frac{1}{2}$
	37	2	தர்மபுரி	147	$8\frac{1}{2}$
	22	1	மேட்டுப்பாளையம்	236	14
	126	7	உதகமண்டலம்	248	$14\frac{1}{2}$
	180	$10\frac{1}{2}$	மதுரை	150	8
	…62	$9\frac{1}{2}$	சிவகங்கை	124	$7\frac{1}{2}$

…he Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras &
…vi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam,